935 No. M. 2330 935 1-51. 'SIDDHANTHAM
Vol. 24—No. 2

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 24 | விக்ருதி மாசி 1951 பிப்ருவரி | இதழ் 2

உள்ளுறை


1. சைவர் மாநாட்டுத் தலைமைப் பேருரை ... 53
2. நெஞ்சே! உனக்கே உபதேசம் ... 65
3. வேந்தும் வேடும் ... 70
4. "பொல்லாதவன்—நெறி யில்லாதவன்" ... 75
5. மதிப்புரை ... 79


R 3 11, N 8
N/242
18373

இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
: வித்வான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சித்தாந்த மகா சமாஜம்
40, ... தெரு, வேளானதேனும்பேட்டை, சென்னை-6

## செய்தித் திரட்டு

**15-1-51.** பொங்கல் திருநாள் - செந்தமிழ்த் திருநாள் இதனை ஒட்டி சித்தாந்த ஆசிரியருக்குப் பல சைவ அன்பர்களும் தமிழ்த் தொண்டர்களும் வாழ்த்துப்பாக்களும் வாழ்த்துரைகளும் அனுப்பியுள்ளார். எல்லாருக்கும் நன்றி.

**19-1-51.** திருப்பூர் நகரசபை க. சு. செட்டியார் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்புவிழா T. A. R. தலைமையில் சுவாமி யதீந்திரானந்தா திறப்புவிழா நடத்தினார்கள். விழா வெகு சிறப்போடு நடந்தது. நன்கொடை மிகச் சிறந்த சைவத் தொண்டு.

**21-1-51.** பிரதோட விரதபூர்த்தி விழா திருப்பேரூரில் ஆராதனையும் கோவைபேட்டை ஈசுவரன் கோயிலில் ஈசான சிவாச்சாரியார், புரிசை முருகேச முதலியார் பெரும் பேச்சுகளும் நடைபெற்றன.

**28-1 51.** சிரவணபுரம் கௌமார மடாலயம் சபை மூன்றாவது ஆண்டுவிழா பல அன்பர்கள் பேச்சுகளுடன் V. C. தலைமையில் நடைபெற்றது.

**28-1-51.** திருவள்ளுவர் படிப்பகம் ஆண்டுவிழா டாக்டர் கே. கே. ச. தலைமையில் கோவை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. திரு. உலக ஊழியர், திரு. பசும்பொன் வ. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பேசினார்கள்.

பூவாளூர் திருப்புகழ் சபை ஆதரவில் அவ்வூர் சிவன் கோயிலில் திருமுருக. கிருபானந்தவாரி அவர்களால் கந்தபுராணத்தில் "பார்வதிப் படலம்" விரிவுரை 8-2-'51 அன்று நடைபெற்றது.

### வருகை

சமாஜத்தின் முன்னாள் செயலாளர் - திருவாளர் கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் கோலாலம்பூரிலிருந்து 9-2-'51 காலை ஜலதுர்க்கா என்னும் கப்பலேறி இந்தியா வருகிறார். அவர்கள் இராமநாதபுரம் ஜில்லா பள்ளத்தூரில் தங்கியிருப்பார்கள்.

### புலிசை ஞானியார் சுவாமிகள் மறைவு

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து ஆறும் முறைத் தலைவராய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக சத்திய ஞான சிவாச்சாரிய சுவாமிகள் சென்ற டிசம்பர் மாதம்

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | விக்ருதி மாசி 1951 பிப்ரவரி | இதழ் 2

## சைவர் மாநாட்டுத் தலைமைப் பேருரை

(திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள்)

[மலர் 24 : இதழ் 1 : 32ம் பக்கத் தொடர்ச்சி]

அண்ணாமலைத் தீபம்போல் அங்குமிங்குமாக, சுமார் நூறு ஆண்டுகளைக்குள், ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், இராமலிங்க அடிகள், மகாத்துமா காந்தி, சிரத்தானந்தர், தாகூர், விபுலானந்தர், அரவிந்தயோகி, ரமண ரிஷி, சாது சுவாமிகள் முதலிய தபோதனர்கள் தோன்றிச் செயற்கரும் பணி பல செய்து உருக்கரந்து விட்டனர். இறுதியிற் குறித்த முச்சுடர்களும், இம் மகா சமாஜத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரும், செந்தமிழ்ப் பெரும்புலமையும் சிவப்பற்றும்கொண்டு பல்லாண்டு அறிவுத்தொண்டாற்றி வந்தவருமாகிய மறைமலையடிகளும், இவ்வாண்டொன்றிலேயே மறைந்து விட்டமை நம் தவக்குறைவின் விளைவேயாகும். எனினும், சிவானந்தர், சுத்தானந்தர், வாலையானந்தர் போன்ற தவப்பெருஞ் செல்வராம் பேரறிஞர்கள் இன்றும் நம்மிடையே இருந்துவருகின்றனர். அரவிந்தப் பெரு ஞாயிறு அஸ்தமிப்பதற்குச் சிறிது முன், மும்முடி

வரத்துப் பாலசந்நியாசி என்னும் இளஞாயிறு உதித்தது. இவ்வாறு பாரத நாட்டில் ஞானச்செல்வர் திருக்கூட்டம் வாழையடி வாழையென வந்துகொண்டே யிருக்கின்றது. இப் புனிதப் பெருநாட்டில் தென்னாடு ஒரு தனிச் சிறப் புடையது. எந்நாட்டவர்க்கும் இறைவனைத் "தென்னா டுடைய சிவனே" என விளிக்கும் மணிவாசகமும், "மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திட" என்ற சேக்கிழார் திருவாக்கும் இன்ன பிறவும் உய்த்துணரத்தக்கன.

எனவே, உலகம் உய்யுநெறியை நம் வாழ்வில் காட்டும் பெரும் பொறுப்பு, சிறப்புவகையில், நம் நாட்டினர்க்கு ஏற் பட்டுள்ளது. ஆனால், இத் தருணத்தில் நம் நாடு நன் னிலையிலில்லை. அரசியற் சுதந்தரம் கிடைத்தும், மக்கள் வாழ்வில் அறநெறி வேர்க்கொள்ளவில்லை. நம் பண்டைப் பெருங் குறிக்கோள்களை மறந்து வருகின்றோம். சத்தியமும் தருமமும் சமுதாயத்தின் எல்லா அடுக்குகளிலும் குன்றி வருகின்றன. அனைவரும் அல்லல் மிக்க வாழ்க்கைக்கு ஆளாகி வருகின்றோம். அறநெறி திறம்பாத முது பெருந் தலைவர்கள் இந் நிலைமையைக் கண்டு நம்மைக் கண்டிக்கின்றனர்; வேண்டுகின்றனர். எழுத்தறிவு மிகக் குறைந்த இந் நாட்டில், 21 வயதுவந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை தந்துவிட்டனர். உத்திரமேரூர்க் கிராம பஞ் சாயத்துச் சபை உறுப்பினர்க்குச் சுமார் ஆயிரம் ஆண்டு கட்கு முன்பு விதித்திருந்த தகுதிகூட, 20ஆம் நூற்றாண்டுச் சட்டத்தில் தோன்றிய அரசியலமைப்பில் இப்பெரு நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்க்கும் விதிக்கப் பெறவில்லை. ஆயினும், அரசியலிலும் பிற துறைகளிலும் சிறந்த அறிஞர்களே நீள நினைந்தபின் இம் முடிவு செய்துள்ளனர். ஆதலின் எளிதில் இதைக் கண்டித்தல் அடாது. பொது மக்களின் சத்திய தரும உணர்விலும் இயற்கையறி

188873



விலும் நம்பிக்கை வைத்து இங்ஙனம் செய்தனர் எனக் கொள்ளக் கடவோம். இம் முறை பரசாட்சி மக்கட்கு நற்பயனை நல்கும் செங்கோலாட்சியாக—தெய்வ ஆட்சி யாக—அமைதற்குரிய முயற்சியெல்லாம் செய்தல் நமது முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

சமய மகாநாட்டின் தலைமையுரையில் அரசியற் கருத் துக்கும் இடமுண்டோ என்று ஓரையம் சிலர்க்கெழலாம். செங்கோலின்றேல், பொது அறமோ சமயச் சிறப்பறமோ நிலைபெறாது. ஆதலின் சமயப்பற்றுள்ளாரும் செங்கோ லாட்சி நிகழ்தற்குரியன செய்யும் கடமையுடையரேயாவர். நம்பிக்கை, சத்திய தருமங்களில் உயர்மதிப்பு முதலிய நற் பண்புகள் அரசியல் வாழ்விலும் இருந்தாதல்வேண்டும் என்று வற்புறுத்தும் கடமை நமக்குண்டு. இதற்கு மகாத்மா காந்தியே ஒரு பெருஞ்சான்று. இவ்வளவில் சமயமாநாடு களும் அரசியலைப்பற்றிக் கவனித்தலவசியமே.

சமயம் என்பதுதான் என்ன? அது வாட்டுச் சாத்திர மன்று; வெறுந் தத்துவக் கோட்பாடன்று; பொருள் தராச் சடங்கன்று; போலி வேடமன்று; குருட்டுக் குருமார் செய்யும் வழிபாடுமன்று; அறிவையும் அன்பையும் தூய் மையையும் வளர்க்கமாட்டாத ஆலயம் மடம் முதலிய அமைப்புமட்டுமன்று. மற்றென்னையோ எனின், மேற் குறித்த அடைமொழிகள் அணுகப்பெறாத சாத்திரமும், கோட்பாடும், சடங்கும், திருவேடமும், ஆசிரியனும், திருக் கோயிலும், திருமடமும் சாதனமாகக் கொண்டு, மக்களைச் செந்நெறியிற் செலுத்தும் ஓர் சிறந்த அமைப்புச் சக்தி ஆகும். சாதனங்களையே சமயம் என மயங்கி எண்ணி, அதைக்கெடுத்துத் தாமும் கெட்டுவந்திருப்பது சமயங் களின் சரித்திரத்தில் காணப்தொன்றே. ஆயினும் இது பற்றியே போலிச் சமயத்தையும் உண்மைச் சமயத்தையும்

ஒன்றென அறிஞர் கொள்ளார். ஒரு மனிதன் வாழ்க்கைக்கு அவன் மூச்சு எப்படி இன்றியமையாததோ, அப்படியே சமயமும் இன்றியமையாததாம். "Religion is not a strange or added thing, but inspiration of secular life, the breathing of an eternal spirit through this temporal world" என்றார் Henry Drummond. இதன் கருத்து, "சமயம் என்பது புதுமையான, அல்லது, புறத்திலிருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்டதொரு பொருளன்று. அது, நம் லௌகிக வாழ்க்கை நல்வழியில் நடைபெறத் தூண்டுமொரு சக்தி. என்றுமுள பரம்பொருள் இம் மண்ணுலகின் மூலமாக விடுகின்ற மூச்சு" என்பது. சமய மென்னும் சக்தி ஒருவன் வாழ்க்கையிற் புகுந்ததும் அவ்வாழ்க்கையினியல்பு மாறி மேம்படும். உடலும், மனமும், உயிரும் ஒரு பரம்பொருளையே உயர்ந்த பொருள் என்று நாடி, அதனுடன் ஒற்றித்து நிற்க முயலும். ஐம்புலச் சேட்டைகள் படிப்படியே அடங்கி அருள் ஆணைவழி இயங்கும். உலகு, உயிர், கடவுள் என்னும் முப்பொருளின், இயல்பும், தொடர்பும் ஓரளவு விளங்கும். இவ்வறிவின் வழி, வாழ்க்கை நடக்கும். சமய வாழ்வு நடத்துபவன் 'வையத்து வாழ்வாங்கு' வாழ்வான். 'வானுறையும் தெய்வத்துள்' வைத்து மதிக்கப்படுவான். இல்லறநெறி பழுத்துத் துறவற நெறியில் புகுந்து, மெய்யறிவும் பெறுவான். 'வாலறிவன் நற்றாள்' தொழுவான்; தாடலையாக நிற்பான். தன் பசுகாணம் பதிகாணமாக மடைமாறப் பெறுவான். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனும்' அருளறம் பூண்பான். முடிவில் 'வானோர்க்குயர்ந்த உலகம் புகுவான். சமயம் இவ்வாறு, மனிதனை விலங்குணர்வினின்றும் மீட்டு, அவனிடம் மனிதப் பண்பை நிறைவித்து, வானோர் தன்மை வருவித்து, முடிவில் பரம்பொருளோடு அவனை ஒன்றுவித்துப் பேரின்பப் பெருவாழ்வில் நிலைபெறுத்தும்.



இது சமய நெறியின் அடிப்படைத் தத்துவம். இந்நெறி பல படிகளையுடைய ஏணி போன்றது; பல கிளை வழிகள் வந்துசேரும் பெருவழி போன்றது. மக்கள் சில பொதுத்தன்மைகளில் ஒத்திருப்பரேனும், ஒவ்வொருவரும் தத்தமக்கே உரிய சிறப்பியல்புகளும் சில உடையர்.* ருசி பேதமேயன்றிப் பக்குவபேதங்களும் உண்டு. கூர்தல் முறையில் (Evolution) உடம்பும், மனமும், உணர்வும் பல அடுக்குகளில் காணப்படும். ஆறறிவுடைய மக்கட் பிறப்பெய்திய பின்னரும் இவ் வேறுபாடுகள் காணப்படும். ஆதலின் அவரவர் பக்குவம், ருசிபேதங்கட் கேற்ப அவர்கட்குச் சமய நெறியும் வழிபடுபொருளும் தேவை. எனவே, பல சமயங்களும் தெய்வங்களும், பலப்பல வழிபாட்டு முறைகளும், நூல்களும் தோன்றின. இவற்றின் தேவையை அறிந்து அவற்றிற்குரிய இடத்தில் முறைப்படி வைத்து எல்லாச் சமயங்களையும் ஒன்றாகக் காணவேண்டும்.

சைவ சமயம் இங்ஙனம் காணும் இயல்புடையது; இஃததன் பெருஞ்சிறப்பு. "சைவமுதலா அளவில் சமயமும் வகுத்து, மேல் சமயங் கடந்தமோன சமரசம் வகுத்தநீ" என்று தாயுமானர் தக்ஷிணாமூர்த்தியைப் பற்றிக் குறிக்கின்றார். "ஓதுசமயங்கள் பொருள்உணரு நூல்கள் ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள் யாது

*Indeed individuality is fundamental in man. It is not merely a certain aspect of the organism, but it permeates our entire being. It makes the self a unique event in the history of the world. It stamps its mark on the whole body and conciousness, although remaining indivisible, on each component of his whole"—P. 220 of *Man the Unknown* by Alexis Carrel.

சமயம் பொருள் நூல் யாதிங்கென்னில், இதுவாகும் அது அல்ல எனும் பிணக்கதின்றி, நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காணநின்றது யாது அதுசமயம் பொருள்நூல்" என்பது சித்தியார்த் திருவாக்கு. சமய நெறியின் உச்சியில் சென்றால் மனோலய இன்பசாகரம் வாய்க்கும்; சமயாதீதப் பழம்பொருள் கிடைக்கும். இது, "வாதமும் சமயபேதமும் கடந்தது" என்பர். தென்முகத் தெய்வம் மோன முத்திரை பிடித்த குறிப்பும் இது. "ராமேச்சுரத் தொருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே", "நானாவித உருவால் நமையாள்வான்" என்பன சம்பந்தர் திருவாக்கு. "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்", "பல்வேறு சமயங்கள் கருதியானைக் கண்டார் மனமேவிய பிரிதியானை" என்பன அப்பர் அருண்மொழிகள். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணும் கொட்டாமோ" என்பது ஒரு திருவாசகம். "சுருதி வானவனும், திருநெடு மாலாம், சுந்தர விசும்பின் இந்திரனும், பருதி வானவனும், படர்சடை முக்கட் பகவனும், அகவுயிர்க் கமுதாம், எருது வாகனனும், எயில்கள் மூன்றெரித்த ஏறுசேவகனுமாம், பின்னும் கருதுவார் கருதும் உருவமாம் கங்கைகொண்ட சோளேச்சரத்தானே" என்பதோர் அருமைத் திருவிசைப்பா. சைவத் திருமுறைகளில் இவைபோன்ற திருவாக்குக்கள் இன்னும் பலவுள. "ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய் எந்தை நீ குறையுமுண்டோ", "வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில், விளங்குபரம் பொருளே நின்விளையாட்டல்லால், மாறுபடுங் கருத்தில்லை" என்பர் தாயுமானார். இராமலிங்கர், "பெருகிய பேரருளுடையார்" "சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்கு" எனவரும் பாட்டுக்களில் இச்சமரசக்



கொள்கையை அணிபெற எடுத்து விளக்குகின்றார். அவரவர் உபாசனைக்கு ஓரே மூர்த்திதான் வேண்டும் என்பது உண்மையே. ஆனால் பிறமூர்த்திகளை வெறுத்தல் பழித்தல் என்றும் கூடாது.

இத்தகைய பரந்த நோக்கமுடைய சமயந்தான் இந் நூற்றாண்டிற்குப் பொருத்தமானது. நாடுகளுக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்குச் சருவதேச சங்கமும் உலகப் பொது நீதிமன்றமும் ஏற்பட்டுள்ளன. உலகப் பொதுநலத்தை ஓம்புதற்காகப் பல குழுக்கள், எல்லா நாட்டினரும் உலகத்தை ஒன்றாகக் கண்டு, இன்ப துன்பங்களைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு, ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று நினைந்து பல துறைகளிலும் முயன்று வருகின்றன. ஒருநாட்டு மக்கள் பல நாடுகளுக்குப் போய்ப் பார்த்து வருவதும் நெருங்கிய தொடர்பு பூண்பதும் பெருவழக்காகி வருகின்றது. பிறர்பால் அன்பும் நன்மதிப்பும் கொள்வதும், நம்மை நாம் மேன்மேலும் புனிதமும் தகுதியும் உடையவர்களாக்கி வருவதும் அவசியமாயுள்ளன. இந்த நிலைமையில், எல்லாச் சமயங்களையும் தழுவிச்செல்லும் சமரச சைவ மனப்பான்மை மிகமிக இன்றியமையாதது. இத்தகைய பெருநோக்கம் நம் பாரத தேசத்துப் பண்டைச் சமயத்திற்றான் பெரிதும் அமைந்துள்ளது. மேலே குறித்த Cardinal Gilroy என்பவர், சுதந்தரம் பெற்றுள்ள தற்கால இந்தியாவில் தமது கத்தோலிக்க கிறிஸ்துவத்தைப் பரப்புதற்கு என்றும்போல் இன்றும் வசதியுள்ளதென்றும், பர்மா இலங்கை, மலாயா, பாகிஸ்தான் முதலிய நாடுகளிலுள்ள கத்தோலிக்க சங்கங்கட்கும் இந்தியாவிலுள்ள கத்தோலிக்க சங்கத்திற்கும் தொடர்பு வலுவுற்று வருகிறதென்றும் கூறியுள்ளார். அவர் உண்மையென்று நம்புவதையே அவர் கூறுகின்றார். கிறிஸ்துவப்

பாதிரிமார்கள் தலையாய நோக்கம் உலகறிந்ததொன்று: எல்லா நாட்டு மக்களையும் கிறிஸ்துவர்களாக்கிவிட வேண்டும் என்பதே அது. அங்ஙனமே மற்றொரு மதமும் எண்ணிப் பலவந்தப் படுத்தியதுண்டு. எந்த நோக்கம் உண்மையானது - சிறந்தது - என்பதைப் பற்றாசின்றிப் பல நாட்டு நல்லறிஞர்களும் ஆராய்ந்து பார்ப்பார்களாயின், சமரச சன்மார்க்கமே சிறந்ததென்ற முடிவிற்குத்தான் வருவர் என்று நம்புகின்றேன். மற்றவர்கள் எப்படி எண்ணினும், நம்மனோர் கொள்கை, நால்வர், தாயுமானார் முதலிய ஞானிகள் காட்டிய சமரச சைவமே.

இச் சைவத்தை நாமே போற்றி உலக நலத்திற்காக அளித்தல் நம்கடன். நம் சைவசமயத்தின் பிற பெருமைகளைப் பற்றிச் சென்ற ஆண்டுகளில் சில அறிஞர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரைகளில் பரக்கக் காணலாம். சைவத் தொன்மையைப் பற்றி, 1948-ல், யாழ்பாணத்துச் சைவர் மாநாட்டுத் தலைமை தாங்கிய அறிஞர் உயர்திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் எடுத்துரைத்த ஆய்வுரைகளை 1949-ம் ஆண்டு ஜனவரியில் வெளிப்போந்த சித்தாந்த இதழில் காணலாம். கொழும்பு மாநாட்டில் தலைமை வகித்த அறிஞர் உயர்திரு. தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார் பேருரையிலும் சைவநெறியின் பிறமாண்புகளுடன் இத்துறையில் காணவுள்ள சில அரிய உண்மைகளும் இனிது புலப்படுத்தப்பட்டுள. சைவ சிநதாந்தக் கருத்துக்களைச் சீரிய முறையில் இதற்கு முன் பல ஆண்டுகளிலும் தலைவர்களும் சொற்பொழிவாற்றிய அறிஞர்களும் விரம்ப எடுத்துரைத்துள்ளார்கள். அறிஞர் உயர்திரு. T. S. கந்தசாமி முதலியாரவர்கள் தலைமையுரையிலும் இந்நலத்தைக் காணலாம். இவ்வாண்டிலும் நம் அரும்பெறற் சமயத்தின் இத்தகைய அழகுகளையும் பெருமைகளையும் எனக்குத்



தெரிந்தவரையில் சிறிது எடுத்துரைக்க வேட்கை யிருப்பினும், காலத்தின் அவசரத் தேவை கருதி அப்பகுதியை நீங்களே நினைப்பூட்டிக் கொள்ளுமாறு விடவேண்டியவனாயுள்ளேன். தொன்மையைப் பற்றி ஒரு குறிப்பு மட்டும் தெரிவித்தல் சிறிது பயனளிக்கலாம். சிந்து சமவெளி நாகரிகத்தைப் பற்றி Sir John Marshall ம், Father Heras ம் எழுதிய பின்னர், அதுபற்றி வெளிவந்த நூல்களில் M. Sakhare என்பவர் வெளியிட்ட லிங்க தாரண சந்திரிகையின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் குறிப்பிடத் தக்கது. அந்நூலின் முன்னுரையே ஒரு நூலளவிற் பெருத்துள்ளது. அதனுள் சைவ சமயத்தின் தொன்மையும், சிந்து சமவெளி நாகரிகம் காட்டும் உண்மைகளும், வேதாகமங்களைப் பற்றிய ஆராய்ச்சியும்,இன்ன பல அரிய ஆய்வுரைக் கருத்துக்களும் அடங்கியிருக்கின்றன. பண்டைநிலை ஆராய்ச்சியில் விருப்பமுள்ளவர்கள் படிக்கத்தக்க நூல்களுள் இஃதொன்று என்பதென் கருத்து.

இத்தகைய அருமைகளை விடுத்து வேறு என்ன தெரிவித்தல் முறையாகும் என்று சில அன்பர்கள் எண்ணலாம். அன்றாட வாழ்க்கையை ஒட்டியது சமயம் என்பதை வற்புறுத்துதல் இன்று அவசியம் என்று உணர்கின்றேன். நமது மகா சமாஜ அமைச்சரவர்களும், யாழ்ப்பாணத்துச் சைவ அன்பர் ஒருவரும், திருநெல்வேலிச் சைவ அறிஞரொருவரும் இம் மகாநாடு செய்யவேண்டியவைகளைப் பற்றிக் கடிதமெழுதியுள்ளார்கள். அவற்றில் மகா சமாஜமும் நடைமுறையில் தீவிரமாகச் சில பணிகளைச் செய்தாக வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்கள். இவர்கள் சைவத்திற் பற்றுடைய பொதுமக்களின் கருத்தை உணர்ந்தே இவ்வாறு எழுதியுள்ளார்கள் என்று கொள்ளுகின்றேன். ஆதலின் நம் நாட்டில் சைவத்திற்குள்ள இடம், சைவ

வாழ்வு வாழ விரும்புவோர் போற்றி ஏற்றுக்கொள்ளத் தக்க சில சைவசமயப் பண்புகள், நாம் தனிமுறை வாழ்வில் வளர்க்கவேண்டிய நலங்கள், பொதுநலத் தொண்டின் அவசியம் முதலிய பொருள்களைப் பற்றிச் சிறிது சுட்டி, பின்பு, இக்காலத்தில் சைவசமயிகள் செய்யவேண்டிய பணிகளின் திட்டம் ஒன்றை, அவர்கள் ஆராய்ந்து, ஏற்ற பெற்றி கைக்கொள்ளுதற்காகச் சமர்ப்பித்து, என்னுரையை முடித்துக் கொள்வேன்.

பாரத நாடு முழுவதும் பண்டோர்கால் சைவத் திருநாடாகவே இருந்தது. இன்றும் இமய முதல் குமரிவரையிலுள்ள பெருநிலப் பரப்பில் ஆங்காங்குச் சைவ ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. நம் நாட்டின் முடியென இலகும் இமயத்தில் கைலாசநாதர், கேதார நாதர், அமர நாதர், பசுபதி நாதர் என்னும் திருப்பெயர்களுடன் சிவபெருமான் எழுந்தருளியிருந்து இன்றும் பல்லாயிர மக்களைத் தன்பால் வசீகரித்து, வாழ்வைப் புனிதமாக்கி வருகின்றார். மலைப் பகுதியை விட்டுச் சமவெளிக்கு வந்தால், விசுவநாதர், சோமநாதர் முதலிய திருப்பெயர்களுடன் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். இன்னும் தெற்கே, எண்ணில் பல கோயில்களில் இருந்தருளுகின்றார். தெற்கில் இராமநாதர் காசியிற்போல் பெருஞ் சிறப்புடன் இலகுகின்றார். இப்பெரும் பரப்பினிடையே ஜகந்நாதரும் அரங்கநாதரும் அணி பெற அமைந்திருப்பதும் கருதி மகிழத்தக்கதே. கைலாச யாத்திரை, காசி இராமேசுவர யாத்திரை என்பவை நம் பெருநாடனைத்தையும் சமயப் பண்பாடு என்னும் நுண்ணிய நூல் ஒன்றாகப் பிணைத்திருப்பதை நாம் நன்குணர வேண்டும்.

நம் நாட்டு வாழ்க்கையின் திண்ணிய குறிக்கோளாகிய ஆன்மலாபம், சிவப்பேறு என்னும் விழுப்பொருளை மேல் நாட்டு நாகரிகம் ஓரளவு சிதைத்து வந்துள்ளது. ஆயி



னும், உலகப்போர்கள் இரண்டு மூண்டு நாசம் விளைத்ததையும், மூன்றாம் போர் நிகழுமோ என்று அஞ்சும் நிலைமை ஏற்பட்டிருப்பதையும் உணர்ந்த மேல்நாட்டுப் பேரறிஞர்களும், அந்நாட்டு வாழ்க்கைக் குறிக்கோள் போதிய சிறப்புடையதன்று என்றுணர்ந்து எழுதியும் பேசியும் வருகின்றனர். தற்கால நாகரீகம் மனிதனை வாலில்லாக் குரங்காக மாற்றி வருகின்றதென்று ஒருவர் அங்கத முறையில் எழுதியுள்ளார். கதை எழுதுவோரும், தத்துவ அறிஞர்களும், விஞ்ஞான அறிஞர் சிலரும் அந்நாட்டு நாகரீகம் பெரியதோர் குறைபாடுடையதென ஒப்புக்கொள்ளுகின்றனர். முக்கியமாக ஒரு நூலை நம்மவர் பலரும் படிக்கவேண்டும் பது என் ஆவல் : அது Man The Unknown* என் என்பது. அதன் ஆசிரியர் Alexis Carrel என்பவர். நோபெல் பரிசு பெற்ற இந்த நுண்ணறிஞர், 30 வருட ஆராய்ச்சியின் பின் எழுதியது இப்பெருநூல். இது சமயக் குறிக்கோள், மானிட யாக்கையின் மர்மமும் மாண்பும், இயம நியமங்களின் இன்றியமையாமை, தற்கால விஞ்ஞான நூல்களின் குணமும் குறைவும், மனிதன் தன்னைத் தானறிய வேண்டுவதன் அவசியம், தற்கால மனித சமுதாய வாழ்வின் அடிப்படையையே திருத்தி அமைக்க வேண்டுவதன் முக்கியம் முதலியன பற்றி மிகவும் அருமையாகப் பல உண்மைகளை எடுத்து விளக்குகின்றது. மேல் நாட்டாரின் மோகத்தில் மூழ்கி மயங்கியவர்கள் தெளிவு பெறவும், நம் நாட்டுச் சமய வாழ்வின் அடிப்படையும் சாதனங்களும் விஞ்ஞானத்தால் போற்றற்குரியன என்றுணர்ந்து போற்றவும் இந்நூல் பெருந்துணையாயிருக்கும்.

---

*Pelican Book—One Shilling and Six Pence.

அறிவாராய்ச்சிகள் மிகுந்துவரும் இக்காலத்திலும், முப்பொருள்களைப் பற்றி அறிஞர்கள் கேட்கும் வினாக்கட்கு விடை தரும் வகையில், சைவசித்தாந்தமே மிகவும் திருப்திகரமானது என்று கூறுதல் மிகையாகாது. கருத்து வேறுபாடு இருக்கலாம். காய்தல் உவத்தல் அகற்றி, பிற கோட்பாடுகளோடு சித்தாந்தக் கோட்பாட்டையும் ஒப்பு நோக்கிய பின், அவரவர் அறிவிற்கு உண்மை எனப் புலப்படுவதை அவரவர் கொள்ளக்கடவர். சைவ சித்தாந்தம், முப்பொருள் உள்பொருள் என்பதையும்,அவற்றின் இலக்கணம் இன்னதென்பதையும்,இறைவன் உயிர்களையும் உலகத்தையும் நோக்க, தானாதல், வேறாதல், உடனாதல் என்னும் மூன்று நிலைகளில் உள்ளான் என்பதையும், இம்மை உலகிற்கும், மறுமை உலகிற்கும், மோக்ஷ நிலைமைக்குமுள்ள தொடர்பு இன்னதென்பதையும், நாம் எங்ஙனம் பொது அறங்களையும் சிறப்பு (சமய) அறங்களையும் செய்து, ஆன்ம நிவேதனத்தின் பயனாய் அரன் கழல் அடைவது என்பதையும், அடைந்து சீவன் முத்தராய் இவ்வுலகில் இருக்கும்வரையில் எப்படி வாழ்வது என்பதையும் இன்ன பிறவற்றையும் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பொது வாழ்விலும் சமய வாழ்விலும் இருபாலாரையும் சமமாகவே கருதுகின்றது. "தொன்மையவாம் எனுமெவையும் நன்றாகா ; இன்று தோன்றிய நூல்எனு மெவையும் தீதாகா" ; "புகல் அளவைக் களவாகி" என்பன போன்ற சித்தாந்த வாசகங்களின்படி அறிவாராய்ச்சிக்கு உரிய இடந்தருவதால் தற்கால அறிவியல் நூல் (விஞ்ஞான) முடிபுகளையும் ஆராய்ந்து அஞ்சாது வரவேற்கும் பண்பாடுடையதாயுள்ளது. யோகஞான அநுபூதிமான்கள் பரம்பரை இன்றளவும் நீடித்து வரும் நிகரிலாப் பெருமை உடையது. "அன்பே சிவம்" ; "உலகுக் குயிராயவன்காண்", "தாய்



தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர்" ; "மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க" என்பன போன்ற மறைமொழிகளால் இறைவன் அன்பே வடிவினன் என்றும், நமக்கு அம்மையப்பன் என்றும் உணர்த்துவது. இடைக்காலத்து வந்து நுழைந்த போலிச் சாதிக் கட்டைத் தகர்த்தெறியும் மெய்ச் சரிதங்களையுடையது. "குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னை", "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி" என்பன போன்ற பல வாசகங்களால் சாதிச் செருக்குணர்வை ஒடுக்க வல்லது. "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு", "ஈசனுக் கன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லார்" என்பன போன்ற மொழிகளால், உயிர்கட்கன்பு வைத்தலின் மூல காரணத்தை உணர்த்துவது. "அரக்கனார் வலிநெருக்கன் ஆலவாய் உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண்மையே" என்ற சம்பந்தர் திருவாக்கானும், "சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பியை" என்ற அப்பர் அருண்மொழியானும், "கள்ளத் தலைவர் துயர்கருதித் தம் கருணை வெள்ளத் தலைவர் மிக" என்று திருவருட்பயனின் இறுதியில் உமாபதி சிவம் அமைத்த அருட்குறளானும், "வந்தித்து நின்னை மறவாக் கடனாகச் சிந்தைசெய நின்னதருள் செய்யாய் பராபரமே" என்ற வேண்டுகையை அடுத்தே "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி யிரங்கவும்நின் தெய்வஅருட் கருணை செய்யாய் பராபரமே" என எழுந்த தாயுமானார் வேண்டுகையானும், "அப்பாநான் வேண்டுதல் கேட்டருள் புரிதல்வேண்டும்" என வரும் இராமலிங்கர் விண்ணப்பத்தானும், இன்ன பிற பல அருளிச் செயல்களானும்

சிவபக்தியுடன் சிவகாருண்யம் இருந்தே ஆகவேண்டுமென்று வற்புறுத்துவது. திருவைந்தெழுத்தின் தொடர்பால் எத்தகைய இழிவையும் பாவத்தையும், போக்கித் தாழ்ந்தோரை உயர்த்தலாம் என்று கட்டுரைப்பது. இல்வாழ்விலிருப்போரும் சிவானுபூதிப் பெரும் பேற்றை எய்துதல் கூடும் என்று புலப்படுத்துவது. குறிகள், அடையாளங்கள், கோயில்கள், சாத்திர தோத்திரங்களை நிரம்ப உடையது. தபோதனர்களாலும் தத்துவ அறிஞர்களாலும், அரசர்கள் முதலிய மேன்மக்களாலும் பொதுமக்களாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகப் போற்றிவரப் பெற்றது.

இத்துணைச் சிறப்புடைத்தாய சைவ வாழ்வை நடாத்துதற்கு வழிகாட்டிகளாக நம் சமய குரவர்களும், சந்தான குரவர்களும், பிற பல அடியார்களும் உள்ளனர். சிறப்பு வகையில், நம் நால்வரைப் பின்பற்றி நலமிக அடையலாம். இந்த நலம் தனி மனிதன் நலம் என்றும், சமுதாய நலம் என்றும் இரண்டு அடுக்கில் உள்ளது. தனி மனிதன் முழு நலமடைதற்கு முதற்கண் வேண்டப்படுவது பொது ஒழுக்கமான கடைக்கால். இல்லறத்தார் மிகுபொருள்வெஃகா திருத்தலும், துறவறத்தார் இறைவன் பற்றன்றி மற்றெப்பற்றும் இல்லா திருத்தலும் மிகவும் முக்கியமானவை. வாய்மை தூய்மை, அன்பு, அருள் முதலிய பண்புகளை வளர்த்தல் வேண்டும். "சத்திய முரைக்க நாளும் சார்ந்த பல்லுயிர்கட்கெல்லாம் நித்தலு மிதமே செய்க, நினைப்பது சிவத்தையென்றும், அத்தன் வேதாகமத்தில் அருளிய பொருளிம் மூன்றும் எத்திறச் சமயத் தோர்க்கும் எவ்வெவர்களுக்குமிட்டம்". இந்நிலையில் நிற்றற்கு, மரணத்தைப் பற்றி நாடொறும்ஒரு முறை ஊன்றி நினைத்தல் ஓரளவு துணை செய்யும் "நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய் யாரறிவார் சாநாளும் வாழ்நாளும் ?" என்ற சம்பந்தர் வாக்கினவசி



யத்தை உணரவேண்டும். சிவ தீக்ஷை, புனிதமும் அன்பும் பொருந்திய தினப்பூசை, பொருளுணர்ந்து செய்யும் பாராயணம், தியானம், விரதம், அன்பர் கூட்டுறவு முதலியவற்றின் துணைகொண்டு, முதலில் நாம் நம்மைச் சீர்திருத்திக்கொண்டு மேனிலை யடைதல் வேண்டும். இந்நெறி நிற்போர்க்குக் கடமை முரண்கள் அடிக்கடி எதிர்ப்படுதல் கூடும். நாயன்மார் முதலிய பல மேன்மக்கள் வாழ்க்கையில் இதனைக் காணலாம். சுந்தர சோழன் கி. பி. 969-ல் இறந்தபோது, அவனோடு உடன்கட்டை யேறிய அவன் மனைவி வானவன் மாதேவிமுன் தோன்றிய கடமை முரணை நினைத்துப் பார்க்க எவர் நெஞ்சமும் பெரிதும் உருகும்: இவள் மகனாகிய முதலாம் இராஜராஜன் பாலுண்ணும் சிறு மகவாயிருக்கையில், கணவன் மரணம் நேர்ந்தது. குழந்தைக்காக உயிர் வாழ்தல் தருமமா? அன்றி, கணவனோடு மாய்தலே தருமமா? என்று அரசமாதேவி வினவித் திகைத்தாள். முடிவில் கணவனுயிருடன் தன்னுயிரைச் சேர்த்தலே தலையாய கடன் என்று முடிவு செய்து தீப்பாய்ந்தாள்.* சாமானியர் வாழ்க்கையிலும் கடமை முரண் தோன்றும். நாம் நன்னெறியினின்றும் விலகிப் பாவப் படுகுழியில் வீழாதிருத்தற்கு, ஞானியாரடிகள் அநுட்டித்து வந்த ஓர் அறிவு சான்ற உபாயம் சாலச் சிறந்தது. அவர்கள் அடிக்கடி சண்முகா! சண்முகா! என்று சொல்லுவது வழக்கம். அதன் கருத்தை அவர்தம் சீடருள் ஒருவருக்கு ஒருநாள் விளக்கி யருளினார். 'சண்முகா' என்பது ஆறுமுகங்களையுடைய முருகவேளைக் குறிப்பதாகும். அவன் ஆறு முகங்களும், சுற்றிலுமுள்ள நால்திசை, மேல், கீழ் என்னும்

*திருக்கோவலூர்க் கல்வெட்டில் "மூலமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும் தலைமகற் பிரியாத் தையல்" என்று இக்கற்பரசியார் குறிக்கப் பெற்றுள்ளார்.

மற்றிரு திசை ஆக ஆறு திசைகளையும் அநவரதமும் நோக்கி நிற்பன. ஆதலின் ஒவ்வொரு மனிதனது முக்கரண வேலைகளும், அவை எவ்வளவு மறைவில் நடைபெறினும் இறைவன் கண்ணுக்குத் தெரியும். இவ்வொரு நினைவு எப்போதும் நம்மிடமிருக்குமாயின், நாம் தீமை எதுவும் செய்யமாட்டோம். இறைவனை நோக்கி உளமுருகிச் செய்யும் பிரார்த்தனையும் உண்மையான ஒரு பெரும் சக்தி என்றும் உணரக்கடவோம்.

இங்ஙனம் சித்த சுத்தியை வளர்த்துச் சிவபூஜை செய்து, தெய்வ ஒளி நம் வாழ்வில் வீசும் நிலையை அடைய அயராது முயலவேண்டும். இதனுடன் மன்னுயிர்த் தொண்டும் ஆற்றிவர வேண்டும். குணம், குறி, பேர், ஊர், செயல் ஒன்றுமில்லாப் பரம்பொருள், பதிநிலையடைந்து பஞ்சகிருத்தியஞ் செய்வதும், நடராஜர் தியாகராஜராய்த் திகழ்வதும், அவர் அடியடைய விரும்பும் அனைவரும் உன்னத் தக்க உண்மைகள். அவர் எண்குணங்கள் நம்மிற் பதிய வேண்டுமாயின், நாமும் மன்னுயிர்த் தொண்டினை, நடமாடுங் கோவில்களில் நம்பனையே பூசிக்கின்றோம் என்னும் உணர்வுடன், ஒல்லும் வகையில் ஓவாதே செய்து வருதல் வேண்டும். "உண்டாலம்ம! இவ்வுலகம்......தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்ற புறப்பாட்டும் நினைவு கூரத்தக்கது. இத்தகைய பொதுநல நாட்டம் ஒரு நாட்டு மக்களிடத்தில் இல்லாவிடில் அந்நாட்டு அரசாங்கம் எந்த பெருநலத்தையும் செய்தல் இயலாதுபோம்.

எனவே, சைவர்களாகிய நாம் நம்மை நாடோறும் புனிதப்படுத்திவர ஒருபுறம் முயன்றுகொண்டு, மற்றொரு புறம் புனிதமுறையில்—நமக்கியன்ற துறைகளில்—அன்புடன் பொது நலத்தொண்டும் புரிந்து வருதல் வேண்டும். நம்



தூயமுறையில் வாழ்ந்த காந்திமகான், யோகி அரவிந்தர் முதலிய சான்றோர் வாழ்க்கையே நமக்குப் போதிய சான்றுகளாகும். இங்ஙனம் நாட்டின் குடிமக்கள் பொதுநல நாடிக் கடமை செய்யாவிடில், செங்கோலாட்சி நிலவாது. வலியோர் மெலியோரை வதைத்து, உலகை நரகமாக்கிவிடுவர். ஆகவே நம் பொறுப்பினை உணர்ந்து, தனித்தும் ஒன்று சேர்ந்தும், பல துறைகளிலும் பொதுநன்மைக்காகத் தொண்டாற்ற வேண்டும்.

இத்தகைய சமய வாழ்வுதான் இருபதாம் நூற்றாண்டுலகை இன்னல் வடிவ இருளுலகமாக இழிந்தொழியா வண்ணம் காக்கவல்லது. Capitalism (முதலாளித்துவம்), Communism (பொதுவுடைமை) என்னும் இரண்டு மருண்ட வாழ்க்கை முறைகளின் வெறித்த போரை விலக்கவல்லது. இவ்விரண்டினுமுள்ள புன்மைகளைப் போக்கி நன்மைகளைப் பிணைக்கவல்லது. உலகமெல்லாம் ஒரு பெருங் குடும்பமாய், ஒரே பெரும் சத்திய தருமக் குடியாட்சியின் இன்புற்று வாழச் செய்யவல்லது.

எப்படி? சமயவாழ்க்கை நடத்துவோர், இராமலிங்க அடிகள் உணர்த்தியபடி, "கருணையும் சிவமே பொருள்" எனக் கடைப்பிடிப்பார். முதலாளிகளாயிருப்பின், யாக்கையும் செல்வமும் அழிவன வென்றும், அன்பும் அருளுமே நிலைத்த இன்பம் தருவன வென்றும் உணர்ந்து மிகுபொருள் வெஃகாமை என்ற பண்டைய மனப்பான்மையை மீண்டும் பெறுவர். தமது அறந்திறம்பா முயற்சியால் தம் தேவைக்கு மேற்பட்ட பொருள் வந்து சேரின், அது சிவன் தந்ததே என்றுணர்ந்து, மனமகிழ்வுடன் எளியோர்க்கு வழங்கி இன்புறுவர். நீர்வரவு பெரிதுடைய ஓர் ஏரி, தனது நீரை மதகுகளின் வழியாக, வயல்கட்கு வழங்கினாலல்லது, தன் கரை உடைய, தானே அழிந்துபோம் என்னும் தத்து

வத்தை உணர்வர். "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாம்" செய்வர். செல்வர்கள் இவ்வகை நடத்திவரின் முதலாளித்துவத்தைப் பற்றிக் கூறப்படும் குறைகள் நீங்கிவிடும்.

இங்ஙனமே சமயவாழ்க்கையானது பொதுவுடைமைக் கட்சியின் புன்மையையும் அகற்றும் : மக்களியாவரும் வறுமையாஞ் சிறுமையினின்றும் தப்பி, நிரம்பிய உண்டி உடை உறையுளுடன் இன்புற்று வாழவேண்டும் என்னும் குறிக்கோள் சிறந்ததே எனினும், அதனினும் சிறந்த மற்றோர் குறிக்கோளுக்குச் சாதனமாகும் அளவில்தான் அது ஏற்கத்தக்கதாகும் என்று கொள்ளும். "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமந்திரத்தை வாழ்க்கைமுறைக் குறிக்கோளாகத் தரும். இம்மையின்பம் சமுதாயத்தில் பெருகுதற்காகப் பாவ முறைகளைக் கையாளுதல் பெருந்துன்பமே தரும் என்று வற்புறுத்தும். உடலுக்கும் புலனுக்கும் இன்பம் பெருக்கினும், மனிதன் தன் அறிவு இச்சை செயற் சுதந்திரத்தைப் பலிகொடுத்துவிட்டு, இவ்வவனியில் வாழ்வதில் ஒரு மேன்மையுமில்லை என்னும் உணர்வை எழுப்பும். அழியாத சிவமே அனைத்தினும் சிறந்த பொருள் ஆதலின், அதனை, வறுமையின் சிறுமையும் வாழ்வின் மையலும் அகன்ற இம்மை வாழ்விலேயே அடையுமாறு தூண்டும். நெறி திறம்பாத சமய வாழ்க்கையின் சக்தியைப்பற்றி இன்னும் விரித்துரைத்தல் வேண்டா.

சமயத் துறையளவில் கருதுங்கால், உண்மையான சமய வாழ்க்கையை நாம் நம் வீட்டளவில் நடத்திவருவதோடமையாது, நாட்டிலும் சமயப் பாதுகாப்பும் வளர்ச்சியும் செய்யும் கடமையுடையோம். நமது சமய நிலையங்களாகிய கோயில்கள், மடங்கள், சபைகள், முதலியவைகள் செம்மையாகத் தத்தம் பணிகளைச் செய்துவருமாறு பார்த்துக்கொள்ளுதலும் நம் கடன். கோயில்களில் திருமதில்கள் இடிந்து விழுவதையும், கோபுரங்களில் மரங்கள் முளைப்பதையும் குப்பை கூளங்கள் கோயில்களில் இருப்பதையும், மடங்கள் அழிவதையும் பார்த்துக்கொண்டு வாளா செல்பவர்களைக் கடமை யுணாராக் கீழ்மக்கள் என்றே அறிஞர் கருதுவர். அன்னோர்க்கும் கடமை யுணர்ச்சி மூட்டுதல் நம்மனோர் கடன். பல்லவ மன்னனும் பராக்கிரம பாண்டியனும் தாம் கட்டிய கோயில்களும் அவற்றில் நடைபெறவேண்டிய சமயத் தொண்டுகளும் என்றென்றும் செம்மைசேர் நிலைமையிலிருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தம் பின் சந்ததியாரை நினைத்துப் பிரார்த்தித்திருக்கும் உருக்கமான வாசகங்கள் நம் உணர்வைப் புனிதப்படுத்திப் பொதுநலத் தொண்டாற்ற ஊக்க வல்லன. "ஞாலநின் புகழே மிக வேண்டும், தென்ஆலவாயில் உறையும் எம்ஆதியே" என்ற ஞானசம்பந்த பரமாசாரியர் திருவுளப் பாங்கின் உயர்வை உன்னிப் பார்ப்போமாக. அவ்வுணர்ச்சியில் சிறிது நாமும் பெற விழைவோமாக, முயலுவோமாக, வேண்டுவோமாக. ஞால முய்யின் நாமும் உய்வோம். அடியாராயின், "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" இறைவன் ; அவன் அவர்கள் "மனத்திலிருந்த கருத்தறிந்து முடிப்பான்."

இனி, உண்மைச் சைவ நன்னெறி உலகெலாம் தழைத்தோங்குதற்கு, நம்மனோர் அறிவாற்றலுடனும், ஆர்வத்துடனும், ஒற்றுமை யுணர்வுடனும், செய்தாகவேண்டிய பணிகளிற் சிறந்தன சிலவற்றைத் திட்டமாகச் சிந்தையுட் பதிக்கத் தலைப்படுவாம்.

(1) சிவநெறியின் இயல்பையும் மாண்பையும் அயல் நாட்டு நல்லோர்கட் கறிவித்தல்:—ஆங்கிலம், ருஷியம், சீனம் முதலிய மொழிகளில் [illegible] திருமுறைத் திரட்டு,

சிவஞான போதம், சிவப்பிரகாசம் முதலியவற்றை மொழிபெயர்த்து, தக்க ஆராய்ச்சி முன்னுரையுடனும், குறிப்புரையுடனும் வெளியிட வழி செய்ய வேண்டும். பகவத் கீதையும் திருக்குறளும் பல மொழிகளில் வெளிவந்துள்ளமை இங்கே கருதத் தக்கது. மொழி பெயர்ப்பு நூல்களேயன்றி, தற்கால அறிவியல் நூல், சரித ஆராய்ச்சி நூல் முதலியவற்றால் உலகறிந்துள்ள உண்மைகளை உளத்துட் கொண்டு சைவ உண்மைகளைப் புலப்படுத்தும் தனிப் பெரு நூல்களும், உலகப் பெருமொழிகளில் எழுதப் பெற வேண்டும்.

(2) சைவ மெய்ம்மைகளை இந்தியாவில், தமிழகத்திற் கப்பாலுள்ள இராச்சியங்களில், பரப்புதல்:—பாரதத் திருநாட்டில் வெளிப் பார்வைக்குப் பல்வகை வேறுபாடுகள் காணப்படினும், அடிப்படையான பண்பாட்டில் ஒற்றுமை பெரிதும் இருப்பதைப் பலரும் அறிவர். ஆயினும் தென்னாட்டில் நிலவும் சைவச் சிறப்பியல்புகள் பல பிற மாகாணஇந்துக்கட்கு நன்கு தெரிய வாய்ப்பில்லை. வடநாட்டுப் பெருமக்களைப் பற்றித் தென்னாடு அறிந்துள்ள அளவு தென்னாட்டுப் பெருமக்களைப் பற்றி அந்நாட்டுச் சகோதரர்கள் அறிந்துகொள்ள நாம் போதியவளவு முயலவில்லை; இனியும் வாளா கிடத்தல் முறையன்று. திருமுறையாசிரியர்கள், பிற்காலத்தில் அவதரித்த சித்தாந்த அநுபூதிச் செல்வர்கள், செந்தமிழ்ப் பெரும் புலவர்கள் இவர்கள் சரிதங்களையும், இவர்கள் அருளிச் செய்துள்ள சிறந்த நூல்களையும், ஹிந்தி, குஜராதி, மராட்டியம், வங்காளி, உருது முதலிய மொழிகளில் ஏற்றவாறு இயற்றி வெளியிட வேண்டும். தென்னிந்தியாவில் தானும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் திராவிட மொழிகளைப் பேசும் நம் சமய சகோதரர்கட்கே, நம் ஆன்றோர்களையும், பெரு நூல்களையும்



தலைகளையும் பற்றி நிரம்ப அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. இம்மொழிகளிலும் தக்க நூல்களை விரைவில் இயற்றி வெளியிடுதல் மிகவும் இன்றியமையாத கடமையாம்.

(3) சைவப் பிரசாரம் செய்தல்:—சிறந்த அறிஞர்களை, இந்தியாவின் பல பகுதிகளிலும், பிற நாடுகளிலும் சென்று சைவ சமய உண்மைகளைப் பரப்புவதற்காக அனுப்ப வேண்டும்.

(4) மாணவருலகிற் சமய அறவொழுக்கத்தைப் பரப்புதல்:—தற்காலத்தில் மாணவ உலகம் பொதுவாகச் சமயத்தை வேம்பென வெறுக்கின்றது. கால வேகத்தில் சமய நிலையங்கள் பலவற்றில் வந்தெய்திய குறைபாடுகளும், சமயச் சார்புடையரெனக் காணப்படுவோர் சிலர்தம் குணஞ் செயல்களில் காணும் குற்றங் குறைகளும், பல காரணங்களால் சமய உண்மைகளை உள்ளவாறு அறியும் ஆர்வமும், வசதியும் அருகிவிட்டமையும் இதற்கு முக்கிய காரணங்களாகும். இன்றைய மாணவர்கள் தாம் நாளைய நாட்டு மன்னர்களாவோர். இவர்கள் மனப் பான்மையையும் குறிக்கோளையும் ஒட்டியே இந்நாட்டின் எதிர்கால வாழ்வு அமையும் என்பது வெளிப்படை. உண்மைச் சமய ஒளியின்றி நடாத்தும் வாழ்க்கை இருள் வாழ்க்கை, மருள் வாழ்க்கை என மேலே கண்டோம். எனவே, மாணவ உலகிற்கு நற்பயன் விளைக்கும் வகையில் சமய அறிவு புகட்டப்பெற வேண்டும். (i) உலகப் பெருஞ் சமயங்கள் தந்த அநுபூதிமான்கள் சரிதங்களையும் அவர்கள் செய்த போதனைகளையும் மாணவர் வகுப்பிற் கேற்றவாறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது டாக்டர் சர். எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட Universities Commission செய்த சிபாரிசுகளில் ஒன்றாகும். (ii) ஏற்றதோர் சமய நூல் அல்லது ஒழுக்க நூலை, விருப்பமுள்ள மாணவர் குழாங்கள்

ஆராய்ச்சிக்கென எடுத்துக் கொண்டு, தக்க மூதறிஞர் தலைமையில் ஊன்றிப் படித்து, தம்முள் உசாவி உண்மை தெளிய ஊக்குதல் ஒருமுறை. தற்கால உலகியல்லையும், விஞ்ஞான நூல் வெளிக்கொணரும் உலகியலறிவையும், பிற பல துறை ஆராய்ச்சிகளின் முடிவுகளையும் உளத்துட்கொண்டு, சமய நூல்களையும் நீதி நூல்களையும் அறிவிற்கும் அநுபவத்திற்கும் பொருந்தி வருமாறு விளக்குதல் சமய போதகாசிரியர்களில் தலையாய கடமையாகும். (iii) விடுமுறை நாட்களில் மாணவர் குழாங்கள் இயற்கை வளமும், சமயச் சார்புமுள்ள தலங்கட்குச் சென்று தங்கி, இயற்கையையும் அதன் உயிராகிய இறைவனையும் பற்றி உணர்தற்கான திட்டத்தை அமைத்துக்கொண்டு, நன்முறையில் பொழுது கழித்தலும் நன்றே. திருப்பராய்த்துறைத் தபோவனத்துப் பெரியார் சித்பவானந்த அடிகள் அந்தர் யோகம் எனுமொரு அமைதி வாழ்க்கை முறையை மாணவ அன்பர் குழாத்துடன் அனுட்டித்துக் காட்டி வருவது இங்கு உன்னத் தக்கதாம். (iv) தற்கால மாணவர் படித்தறிந்து போற்றும் வகையில் துண்டுப் பிரசுரங்களும், வினா விடைகளும், பிறவகை நூல்களும் தக்காரைக்கொண்டு எழுதப்பெற்று வெளிவருதலும் அவசியம்.

(4) **சமயக் கல்லூரி** (Theological College) **அமைத்தல்:**—சமய அறிவொழுக்கங்களைத் திறம்படப் பரப்புதற்குத் தக்க பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தேவை. இக்காலத்தில் மாணவர்களும் பிறரும் மதிக்கத் தக்க வகையில் சமயபோதனை செய்ய விரும்புவோர், புத்தம், சமணம், கிறிஸ்துவம், இஸ்லாம், முதலிய புறச் சமயங்களையும் தற்கால அறிவியல் நூல் முடிபுகளையும், உலக சரித்திரப் போக்கையும் நன்கறிந்து அவற்றுடன் தம் சமய நூல்களையும் கசடறக் கற்றவர்களாயிருத்தல் வேண்டும். இவர்கள் தமி



ழில் நல்ல புலமையும், போதிய ஆங்கில அறிவும் உடையாராயிருத்தலோடு, வடமொழியிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருத்தல் நலம். சமய ஒழுக்கமும் இன்றியமையாதது. உயர் நிலைச் சமயாநுபூதி என்பது மட்டும் எல்லாரிடத்தும் எதிர்பார்க்கக் கூடிய தொன்றன்று. அஃதும் வாய்த்துவிடுமாயின் அப்போதகரின் பெருமையை அளவிட முடியாது. அவரை மெய்ஞ்ஞானி என உலகம் தனிமுறையில் போற்றும். இந்த உன்னத நிலையை எட்டாத பேர்களும், மேற்சொன்ன அறிவொழுக்கங்களை உடையவர்களாயின், அவர்கள் சமய போதகர்களாகலாம். இவர்கள் லௌகிகக் கல்வியில் பட்டங்கள் பெறுவதோடு, ஐந்து ஆண்டு-ஏழாண்டு வரையில் சமய நூல்களையும் கற்று, B. D., D. D. என்னும் சமயப் பட்டங்களையும் பெறுதல் வேண்டும். இவர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர்களாயமர்ந்து தம் நல்வாழ்வின் உதாரணத்தாலும், நற்போதனையாலும் மாணவர் வாழ்க்கையில் சமய நெறி புகுமாறு செய்ய வல்லவராவார்கள்; ஏனையோர்க்கும் நல்ல சமய உணர்வு தருவார்கள்; அன்றியும், பெருங் கோவில்களில் பிரசாரகர்களாகவும், மடங்களில் தம்பிரான்களாகவும், தலைவர்களாகவும் வருதற்குரியவராவர். வெறுஞ் சாத்திரப் பிரமாணத்தைக் காட்டாது, உலகியலறிவு நூல் முடிபுகளையும், கேட்போர் பகுத்தறிவையும் பயன்படுத்திச் சமய உண்மைகளை இவர்கள் விளக்க வல்லவர்களாதலின், எதிர்கால மக்கள் வாழ்வில் சமய அறிவு நிலைபெறும். அநுபவ ஞானிகளைக் காணப் பெறுவோர், பாசஞான பசுஞானங்களைக் கடந்த பதிஞானம் பெற்று மிளிர்வர். எனவே இத்தகைய சமய ஞானக் கல்லூரி தமிழகத்தில் ஒன்று இன்று தேவை. இதனை அமைக்க நேருங்கால், கோடைக்கானல், பெங்களூர், சீராம்பூர் முதலிய ஊர்களில் அமைந்துள்ள கிறிஸ்துவ சமயக் கல்லூரி

களின் பாடதிட்டங்கள் நடைமுறைகள் முதலியவற்றைக் கூர்ந்து நோக்கி, நமக்கு ஏற்றவாறு திட்டம் அமைத்துக் கொள்ளலாம். இத்தகைய சைவக் கல்லூரி ஒன்றைக் கூடிய விரைவில் தமிழகத்தில் அமைக்கச் சைவ சமுதாய அறிஞர் முந்த வேண்டும். லௌகிக முறையிலும் இக்கல்லூரிப் பட்டத்திற்கு மதிப்பிருத்தல் அவசியமாதலின், கல்லூரியை ஒரு பல்கலைக் கழகத்துடன் (University) இணைத்தல் அவசியம். நாம் காணவிரும்பும் சைவக் கல்லூரியை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்தல் எல்லா வகையிலும் பொருத்த முடையதாகும்.

(5) **எளியோர்க்குத் தொண்டாற்றல்:**—இவர்கள் வசிக்கும் இடங்களில் தங்கி ஏழை மக்களோடு அன்பொடு பழகி அவர்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்காகச் சில தொண்டர் தம் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்வதைக் காணுங் காலம் நம் சமயத் தொண்டின் சரிதத்தில் பொற்காலமாகும். இவ்வாறு முழுவதும் தம்மை அர்ப்பணம் செய்யத் தொண்டர்கள் கிடைக்காவிடினும், அடிக்கடி அவர்களோடு தாயன்புடன் பழகும் பான்மை யுடையோரைக் கொண்டு இயன்றவளவு சேவை செய்ய வேண்டும். கிறிஸ்து நன்மக்கள் எத்தனை பேர் இங்ஙனம் எளியோர் நலத்துக்காகத் தமது வாழ்க்கையையே மனமார ஒப்புவித்துவிட்டுள்ள அருட்பாங்கை இன்றும் காண்கின்றோம். ஏழைக் கூலிகள், யந்திரசாலைத் தொழிலாளர்களின் வீடுகட்கும் தரும வைத்தியசாலைகள்; சிறைக்கூடங்கள் முதலிய இடங்கட்கும் சைவத் தொண்டர்கள் சென்று அன்புத் தொண்டு செய்ய ஊக்க வேண்டும். தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் எனவொரு சங்கம் திருவண்ணாமலையைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு, ஆங்கே ஆண்டுதோறும் மாநாடுகள் நடத்தி வருகின்றது. அதன் உறுப்பினர்களில் ஒரு சிலர் இத்தகைய தொண்டினை



மேற்கொள்ளின் அது நம் சமயத்திற்குப் பெருஞ் சிறப்பைத் தரும்.

(6) **சைவப் பத்திரிகை நடாத்தல்:**—ஒருசில மாதப் பத்திரிகைகளே இதுகாலை சைவசமயச் சார்பில் வெளிவருகின்றன. நாடுமுழுதும் நிகழும் சைவ சமயச் செய்திகளையும், சைவ சமுதாயத் தேவைகளையும் அறிஞர் கருத்துக்களையும் தெரிவிக்க வாரப் பத்திரிகையேனும் ஒன்று வெளிவருதல் அவசியம்.

(7) **சைவ சபைகளை அமைத்தல்:**—மேற்குறித்த பணிகளையும் அவைபோன்ற பிறவற்றையும் நடத்துதற்கு ஏற்ற சங்கங்கள் தேவை. மாகாணத்திற்கு ஒரு தலைமைச்சபையும், அதனோடு இணைக்கப்பெற்ற பல ஜில்லாச் சபைகளும், ஊர்ச் சபைகளும் அவசியம். இத்தேவை மகாசமாஜக்கூட்டங்களில் முன்னமே பன்முறை தெரிவிக்கப்பட்டதொன்றே. நமது மகாசமாஜம் தமிழகத்திற்குத் தலைமைச்சபை என்பது சைவ உலகம் ஒத்துக்கொண்டுள்ள உண்மை. ஊர்ச் சபைகளும், ஜில்லாச் சபைகளும் விரைவிலேற்படுத்த அறிஞர்கள் மனங்கொண்டு, பலங்கொள்ளலவசியம். சென்னைமாநகரிலும், ஜில்லாவின் தலைநகரங்களிலும், முறையே சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கும், ஜில்லா சைவ சபைகட்கும் சொந்தமான செயலகங்கள் இருத்தல் அவசியம். இவைகளில், வெளியூர்ச் சபை அங்கத்தவர்கள் சிறுபொழுது தங்க இடவசதியும், வழிபாடாற்றப் பூசைமடமும், புத்தகசாலையும், சிறு வாசகசாலையும், பிரசங்க மண்டபமும் அமைக்கப்பெறின், சமய நலங்கள் சில வளரும். தங்கிச் செல்வோர் தரவேண்டிய சொற்ப கட்டணத்தைப் பற்றியும் பிற அவசியமான விஷயங்களைப்பற்றியும்சில விதிகளை அமைத்துக்கொள்ளலாம். கோயில்களும் மடங்களும் தம்மாலியன்றவளவு இத்துறையில் இடவசதியளித்தல் சமய வளர்ச்சிக்கு ஏற்றதாகும்.

(8) **தலயாத்திரை செய்தல்:**—ஜில்லா சபைகளும், ஊர்ச் சபைகளும் ஒருங்காலோசித்து, பாடல் பெற்ற தலங்கட்கும் பிற தலங்கட்கும் யாத்திரையாகச் சென்று சமயப்பற்றையும், அறிவையும், ஒற்றுமையையும் வளர்த்து வருவதும் அவசியமே. சில்லாண்டுகளுக்கு முன்வரையில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், தலயாத்திரைச் சங்கம், காரைக்குடிச் சிவநேசர் திருக்கூட்டம் என்பன இத்தொண்டினைச் சிறக்கச் செய்து வந்தன. இந்நாளில், குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகம் என்பன அன்பும் அறிவும் செறிந்த முறையில் இப்பணியைச் செய்துவருகின்றன. நம் சமயாச்சாரியர்களும் பிற ஆன்றோர்களும் செய்துகாட்டிய இத்தொண்டினையும், லௌகிக விடுமுறை காலங்களிலும், பிற அவசிய சமயங்களிலும் பலபேர் ஒன்று கூடி நிகழ்த்துதலால் பெரும்பயன் விளையும்.

(9) **சமயப் பாதுகாப்பு நிதி வைத்து வளர்த்தல்:**—மேற்குறித்த சமயப்பணிகளையும், அன்னபிறவற்றையும் செவ்வையாகச் செய்தற்கு ஒரு நிதி வைத்துத் திறம்பெறப் பணிகளை நிகழ்த்தி வரவேண்டும். நமது முன்னோர்கள் ஏராளமாக நிலங்களையும், ஊர்களையும், பிற பொருள்களையும் சமயப் பாதுகாப்புக்காக அளித்த வள்ளன்மையை யாவரும் அறிவீர்கள். இந்நாளில் அங்ஙனம் வழங்குவோரைக் காண்டலருகிவிட்டது. இனி, செல்வர்கள் கையையே எதிர்பார்த்திராமல், நடுத்தர வாழ்வினரும், ஏழைகளும்கூட ஒன்றுபட்டுச் சமயப் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்குமாகக் காணிக்கை தருவது கடனென்று உணரவேண்டும். இஸ்லாத்துச் சோதரர்கள் ரம்ஜான் மாதந்தோறும் தம் சொத்தில் $2\frac{1}{4}\%$ தம் சமயத்தின் வளர்ச்சிக்கும், தம் சமய ஏழைகள் நலத்திற்குமாக மனமுவந்து தவறாது அளித்து வருகின்றனர். கிறிஸ்துவர்களும், சீக்கியரும் ஆரிய சமாஜத்



தினரும் இங்ஙனம் முறையாகச் சமயக் காணிக்கை செலுத்தி வருகின்றனர். அரசர்களும் சமயப்பற்றுள்ள செல்வர்களும் அருகிவருமிக்காலத்தில் சைவப் பொது மக்கள் இத்துறையில் தங்கள் கடமையைச் செய்ய ஆர்வத்துடன் முன்வரவேண்டும். காணிக்கை அளவு, வசூலிக்கும் முறை, பாதுகாப்புத் திட்டம், செலவு செய்யும் வகை முதலியவற்றையெல்லாம் மகாநாட்டு அறிஞர் குழு ஆராய்ந்து அறிவித்தல் முறையாம்.

(10) **சிவாலய மடாலய பரிபாலனத்தில் அக்கறை கொள்ளல்:**—ஒவ்வோர் ஊரினரும் தத்தம்மூர்க் கோயில்கள் செம்மையாகப் பரிபாலிக்கப் பெற்றுச் சமய வளர்ச்சி செய்து வருகின்றனவா என்று கவனித்து வருதல் கடன். அதனோடு நில்லாமல், தம் வட்டாரங்களில் ஜில்லாக்களிலுள்ள தம் சமயக்கோயில்களும், மடங்களும் தத்தம் கடமைகளைத் திருத்தமாகச் செய்து வருகின்றனவா என்று கருத்துடன் கவனித்து வருதலும் நன்மக்கள் சமயக்கடமையாகும். இந்து அறநிலயப் பாதுகாப்பு மசோதா இப்போது புதுக்கப்பட்டிருப்பதும், விரைவில் அது சட்டமாக வரஇருப்பதும் யாவரும் அறிந்தது. உத்தியோகப்பற்றில்லாதவர்களைக் கொண்ட மேற்பார்வை சபைகளும், தருமகர்த்தர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அடுக்கடுக்காய்ப் பலரும் இனிக் கோயில்களின் நிருவாகத்தை நடத்துவர். மடங்களும் குறிப்பிடத்தக்க அளவு அரசாங்க மேற்பார்வையில் தம் பணி செய்யநேரிடும். உபரி வருமானங்களைப் பயன்படுத்தும் பெரிய விஷயமும் எதிர் வந்து நிற்கும். சமயப் பற்றுடையார் அனைவரும் முழு அக்கறையுடன் கோவில் மட நிர்வாகங்களைப் பற்றிக் கவனித்து வந்தாலன்றி, கேடுகள் பல நிகழ்தல் கூடும். ஊர்ச் சபைகள், ஜில்லா சங்கங்கள் இவற்றின் வாயிலாக, மேற்

பார்வைக் குழுவினர்களுடனும், மகா சமாஜத்துடனும், அவசியம் தோன்றிய போதெல்லாம், தொடர்பு மேற்கொண்டு, சமய நிலயங்களின் சொத்துகட்கும், அதன் பணிகட்கும் எவ்வளவு கேடும் வாராமல் பார்த்து வருதல் சமயிகள் கடன். பொது ஜனங்கள் கவனிக்காவிட்டால், ஆன்றோர்கள் அன்புடன் தம் பின்னோர் நலங்கருதி அமைத்த அரும்பெரும் சமய நிலையங்கள் வீழ்ச்சியடையும்.

" செய்தக்க அல்ல செய்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் "

" கடனென்ப நல்லவை எல்லாம் கடனறி
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு "

என்ற தமிழ்மறை அறவுரைகளை நாமனைவரும் நெஞ்சிற் பதித்து, குடியாட்சி முறை வரும் இக்காலத்தில் அற நிலயங்கள் தோன்றி நிலைதிரியா வண்ணம் காக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

(11) திருமடங்களில் சமய வளர்ச்சிக்காக்க மளித்தல்:— திருக்கோயில்களும் திருமடங்களும் சமயப்பணி புரியினும், திருமடங்களில்தான் தீக்ஷையளித்தல், சீடர்கள் சேர்த்தல், சமய பாடஞ் சொல்லல், அநுபவ ஞானம் பெறச் சாதனம் பயிலல் முதலிய சிறப்புச் செயல்கள் நிகழ்கின்றன. தமிழ் வளர்ச்சியும் தமிழக மடங்களின் சிறப்புத் தொண்டுகளில் ஒன்றாயுள்ளது. அறிவுடையுலகம் மதிக்கத்தக்கவர்கள் ஆதீனங்களில் ஆட்சிபெற்றுத் தொண்டாற்றுவதையே அனைவரும் விரும்புவர். சமயப் பற்றற்ற அரசாங்கத்தின் மேற்பார்வை நுழைந்துவிட்ட இக்காலத்தில், திருமடங்களின் தலைவர்கள் தங்கள் சமயத்தவர்களில் அறிவொழுக்கமும், அந்தஸ்தும், செல்வாக்கும், சமயப் பற்றும் உடையார் சிலரைத் தாமாகவே தேர்ந்தெடுத்துத் தங்கட்கு ஆலோசனைக் குழுவினராக நியமித்துக்கொண்டு அவர்களுடன் கலந்து தங்கள் பணிகளையும் செலவுத் திட்டங்களையும் வகுத்துக் கொள்ளல் விரும்பத்தக்கது. சமயப் பணிகளைச் சரிவரச் செய்யாமல், உபரிப்பணங்காட்ட உத்தியோகஸ்தர் சிலர் ஊக்கங்கொள்ளுதலும் கூடும் என்று பலர் அஞ்சுகின்றனர். இம்முறைகேடு நிகழா வண்ணம் காத்துக் கொள்ளுதற்கு மேற்குறித்த தக்கார் ஆலோசனைக்குழு பெரிதும் பயன்படும். இவர்களே யன்றி, ஒரு மடம் பரிபாலிக்கும் சமயத்தைச் சார்ந்தார் அனைவருமே அச்சமய மடங்களில் அன்பு வைத்து அதன் சமயப்பணிகளில் ஒல்வகை கலந்துகொண்டு, அதற்கு எவரும் தீங்கிழைக்கா வண்ணம் கண்ணிமைபோல் காத்துவரவேண்டும்.



(12) கால இயல்பறிந்து சமயத்தை வளர்த்தல் :—சமயப் பொறை, சமரச சைவத்தில் வற்புறுத்தியிருப்பது மேலே குறிக்கப்பட்டது. ஆதலால் பிற சமயத்தில் நிற்போரை வலிய இழுத்துச் சைவத்திற் சேர்ப்பது நமக்கு மரபன்று. ஆயினும் முன்னாளில் எக்காரணத்தினாலோ புறமதம் சென்றவர்கள் மீண்டும் சைவஞ்சேர மனமார விரும்பினால் அவர்களை அன்புடன் நம் சமயத்தில் வாவேற்றுச் சிவதீக்ஷை முதலிய சமய உரிமைகளனைத்தையும் நல்கவேண்டும். இதுபற்றிச் சைவ சித்தாந்த மகா சமாஜம் முன்னரே செய்துள்ள தீர்மானமும், தொண்டன் பத்திரிகை ஆசிரியரவர்கள் செய்துவரும் சமயப் பிரவேசத் திருப்பணியும் நினைவு கூரத்தக்கவை

(13) செங்கோல் ஆட்சி நிகழத் துணைபுரிதல் :—ஒரு நாட்டு மக்கள் எம் மதத்தினராயினும், அந்நாட்டில் அறநிலை திரியாச் செங்கோலாட்சி நடைபெறுவதில் அக்கரைகொள்ளும் கடப்பாடுடையர். குடியாட்சி முறையில், இக் கடமை மிகமிக முக்கியமானது என்பது வெளிப்படை. எனவே பஞ்சாயத்துச் சபைமுதல் பாராள் மன்றம் வரையிலுள்ள

சபைகட்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்குங்கால், மனச்சான்றுக்கும் கடவுள் நெறிக்கும் மாறுபாடின்றி, சத்தியமும் தருமமுமே வழிகாட்டச் சென்று கடனாற்றவேண்டும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயனையும் அடைதற்குச் செங்கோல் இன்றியமையாததாகலின், சைவ நன்மக்களும் பிற சகோதரர்களும் சேர்ந்து, அறிவும், அறமும், ஆண்மையும், நேர்மையும், கடமையுணர்வும் செறிந்த முறையிலே அறிவொழுக்கமும், தெய்வ நிச்சய உணர்வும், தொண்டாற்றும் திறனும், வசதியும் உடைய தலைவர்களையே தேர்ந்தெடுத்தல்வேண்டும்.

(14) வழிபாடு நடாத்தல் :—மேற்கூறிய கடமைகள் யாவும் ஒழுங்காக நடைபெறுதற்கு இறைவனருளை நாடும் வழிபாடு இன்றியமையாதது. இவ்வுண்மையைப்பற்றி, 1929ம்ஆு மார்சுமீ திருநெல்வேலியில் நடந்த சைவப்பெரியார் தனிக் கூட்டம் தன் கருத்தைப் பின்வருமாறு தெரிவித்துள்ளது :

"சைவசமய வளர்ச்சிக்குரிய நன்னோக்கங்களும் நன்முயற்சிகளும் நிறைவேறுதற்பொருட்டும், உலகம் நலமடைதற்பொருட்டும், சைவருள் ஒவ்வொருவரும் நாடோறும் இறைவனைப் பிரார்த்தனை புரிதலுடன், சைவசபைகளிலும் கோயில்களிலும் வாரந்தோறும் சைவர் பலரும் ஒருங்கு கூடி இறைவனை அன்புமிக்க மொழிகளால் வேண்டிக்கொள்ளுதல் கடமையாகும்".

இம் முடிபினைப்பற்றி அந்நாட் சித்தாந்தம் பத்திராசிரியர், "ஒவ்வொரு சைவரும் தனித்தும், சேர்ந்தும், பிரார்த்தனை (Individual and Congregational Prayer) செய்வதின் சிறப்பையும், அதனால் பயன் விளையும் என்ற உண்மையையும் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது" என்று விளக்கக் குறிப்பு எழுதினார்.



அவ்வாண்டு மே மாதத்தில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவமிகள் மடாலயத்தில், அவர்களும் மறைமலையடிகளும் முன்னின்று நடத்திய சைவர் மகாநாடும் இத் தீர்மானத்தை ஒத்துக்கொண்டது.

பின்பு, இக் கருத்து வார வழிபாடு என்னும் ஓர் வழிபாட்டு முறையை வகுத்து விளக்க ஏதுவாயிற்று. இது பற்றிய கட்டுரை யொன்று, ஆர்க்காட்டுக் கண்ணன் திருச்சபை, பேரூர் தேவஸ்தானம், தருமபுர ஆதீனம் என்னும் சமய நிலையங்களால் வெவ்வேறு காலங்களில் அச்சிடப்பெற்றது. பிரதிகள் இலவசமாகப் பல ஜில்லாக்களில் வழங்கப்பெற்றன.

1938ம் ஆண்டில் சைவசித்தாந்த மகாசமாஜம் கோயம்புத்தூரில் நடத்திய சைவர் மாநாட்டில் வாரவழிபாட்டு முறை திட்டமாக விளக்கப்பட்டது. திருப்பாதிரிப்புலியூரை அடுத்த வில்வாரய நத்தத்துச் சிவாலயத்தில் இம்முறை வழிபாடு முதன்முதல் தொடங்கப்பெற்றது. காஞ்சிபுரம், வட ஆர்க்காட்டு மாவட்டத்திலுள்ள வேலூர், ஆர்க்காடு, மகாதேவி மங்கலம், களம்பூர், ராணிப்பேட்டை, முதலிய ஊர்களிலும் தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம், சிவகாசி, கும்பகோணம், சிதம்பரம், தருமையாதீனப் பெருங்கோயில்களுள்ள ஊர்கள், திருவேட்களம், வாகூர் முதலிய பல இடங்களிலும் வாரவழிபாட்டியக்கம் இதுவரை பரவியுள்ளது.கொழும்பு நகரத்திலும் கூட்டுப் பிரார்த்தனை என்னும்பெயருடன் வாரவழிபாடு நன்முறையில் நடந்துவருகின்றது. இம்முறை வழிபாடொன்று தேவை என்று அன்பர்கள் பலர் உணர்ந்து வருகிறார்கள் என்பது இதனால் புலனாகும். இம் முறை வழிபாட்டின் அவசியம், அதன் ஆறு அங்கங்கள், இவற்றுள் ஒவ்வொன்றின் இயல்பு, பயன் இவைகளை எல்லாம், வார வழிபாடு என்னும் கட்டுரை

போதியவளவு விளக்குகின்றது. சைவப் பெருமக்கள் அன்புடன் இம் முறையினை நன்காராய்ந்து, தாங்கள் அவசியமெனக் கருதும் திருத்தங்களுடன் தத்தம் ஊர்களிலும் சுற்றுப்புறங்களிலும் பரப்பி, தனிமனிதர் வாழ்விலும், குடும்ப வாழ்விலும், நாட்டுவாழ்விலும் சிவமணம் கமழுமாறு திருவருளை முன்னிட்டுத் திடமுயற்சி செய்யுமாறு வேண்டுகின்றேன். நம்சைவ சமுதாயம் இந்நாளில் உயர்வுணர்ச்சியிலும், ஒற்றுமையிலும், ஆற்றலிலும் மிகவும் குறைந்ததாய்க் காண்கின்றது. இவ்வயர்ச்சியை-குறைவை-போக்குதற்கு, நாம் யாவரும் தனித்தும், ஒன்று சேர்ந்தும், எல்லா நலங்கட்கும் பிறப்பிடமாகிய "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை" அன்புடன் அணுகி வழிபடுவோமாக; பிரார்த்திப்போமாக; இம் மகா சமாஜத்தை உறுகருவியாகக் கொண்டு விழுமிய தொண்டாற்றுவோமாக. அம்மையப்பர் அருளை நிரம்பவும் பெற்று இறைபணியில் நிற்கும் இன்பநிலை எய்துவோமாக.

"வைய நீடுக, மாமழை மன்னுக,
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக,
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே"

திருச்சிற்றம்பலம்

# நெஞ்சே! உனக்கே உபதேசம்

(அ. தா. ப. திருஞானசம்பந்தம்—திருவண்ணாமலை)

இலக்கியப் புலவர்களோ, மெய்ம்மையையும் சிற்றின்பத்தையும், சமயப் புலவர்களோ பேரின்ப மெய்ப்பொருள்களையும் உணர்த்தவந்த நேரத்தில் கோத்தும்பி, வண்டு, நெஞ்சம்—மனம், இவற்றை முன்னிலைப்படுத்தியே சென்றிருக்கிறார்கள். இதைத் தவிர இலக்கியப் புலவர்கள் அணங்கை முன்னிலைப்படுத்திப் பேசிச் சென்ற இடங்கள் பற்பல. இன்னோரெல்லாம் வலியுறுத்திய அருங்கருத்துகள், ஒரு முன்னிலைப்படுத்திய பொருளை உய்விக்க அல்ல. பின் எதற்கு எனின் முன்னிலைப்படுத்தும் பொருள் வாயிலாக உலக மக்கட்கு நல்லறிவு கொளுத்தும் நோக்கமே அன்றி வேறல்ல. நாலடியாரில் மெய்ம்மையைச் (Truth) சிறப்பிக்க வந்த புலவர் ஒருவர் பைந்தொடியாளை முன்னிலைப்படுத்தி உண்மையை உணர்த்துகிறார். முறையாகப் பூண்ட வளையல்களை உடையவளே! ஒருவன் தன்னால் கொடுத்தற்கரிய யாதேனும் ஒரு பொருளை ஏற்றோனுக்கு, ஏற்ற காலத்தே யில்லையென்று சொல்லுதல் பழிப்பே யாகாது. இது உலக இயல்பாம். ஏற்றோன் ஆசையால் வருந்தும்படிக் கொடுப்பேன் என்று பொய் சொல்லல் ஒருவன் செய்த உபகாரத்தை யழித்தாருடைய குற்றத்தைப் போன்ற குற்றமுடையது என்றன்றோ வலியுறுத்துகிறார். அறிவு புகட்ட வந்த ஆசிரியர் தனக்குகந்த முன்னிலைப் பொருளான நிரைதொடியை வைத்துப் பேசுவதை நோக்குமின்!

இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்,
வசையன்று வையத் தியற்கை—நசையழுக்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
அறியவு முளவோ நீயறியும் பூவே—குறுந்தொகை.

கற்புடைய மங்கையரின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்று கூற வருங்கால் ஆசிரியர், மலர்கள்தோறும் பறந்து சென்று, மதுவையுண்டு இன்புற்றிருக்கும் தும்பியைத் தானே முன்னிலைப்படுத்துகிறார். இங்ஙனமே இலக்கியப் புலவர்கள் பலவிடங்களில் தும்பி, வண்டு, அணங்கு இவைகளை முன்னிலைப்படுத்திப் பேசிச் செல்வர். இது இயல்பாகவே அமைந்துள்ளது. ஆனால் இவர்களை விடச் சமயப் பயிரை வளர்க்க வந்தப் பெருந்தகைகள் அதிகமாக நெஞ்சை முன்னிலைப்படுத்தியே பேசிச் சென்றிருக்கிறார்கள். ஓரோரிடத்தில் தும்பி, வண்டு இவற்றை முன்னிலைப்படுத்தியும் கூறியிருக்கிறார்கள். இலக்கிய வழி நின்ற புலவர் பெருமக்கள் முன்னிலைப்படுத்தும் பொருளும் சமயப் பெரியார்கள் முன்னிலைப்படுத்தும் பொருளும் ஒன்றாயிருப்பினும், அவை கையாளப்படும் இடமோ வேறு வேறாக இருக்கும். புலவர்கள் அதிகமாக சிற்றின்ப நாட்டத்தில் மனம் செலுத்தும் அளவில் முன்னிலைப்படுத்துவர். சமயப் பெரியார்கள் அங்ஙனம் ஓர் இடத்திலும் படுத்தார். பின் எவ்வாறு? மெய்ஞ்ஞான நாட்டமுறும் தன்மைக்கு அழைத்துச் செல்லும் வகையில் அன்றோ. ஓர் பொருளை (தும்பி, வண்டு, நெஞ்சம்) முன்னிலையாக வைத்துப் பா இசைத்துச் சென்றார்கள். அவற்றில் ஒன்றை இவண் காண்பாம்.

"பெருந்துறை புகுந்துப் பேரின்ப வெள்ளத்தாழ்கியப் புனிதன் மொழிந்த வாசகத்துள்" கோத்தும்பியை முன்னிலைப்படுத்திப் பேரின்பப் பாதையைக் காட்டுவதைக் காண்பாம். கோத்தும்பி! நீ இங்கே அழகாகப் பறந்து இன்னிசையோடு ஊதி நோக்கத்தைப் பாழ் செய்வதால் என்ன பயன்? வேதங்களுக்கெல்லாம் அப்பால் உள்ள நீலகண்ட அண்ணலின் திருப்பாதங்களைச் சார்தலுமே, இறப்பு, பிறப்பு என்ற இருவினைகளையும் மயக்கறுக்கும் தடங்கருணைப் பெருங்கடலாகிய அன்னார்க்கே சென்று ஊதுவாயாக! பேரின்பப் பாதையை வகுத்துக் காட்டும் அடிகள், கோத்தும்பியை முன்னிலைப்படுத்துவதை நோக்குமின்!



*காணங்களெல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றான்*
*சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு*
*மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்தக்*
*கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!*

இதுவரை புலவர்கள் முன்னிலைப்படுத்தி, ஒரு பொருளைக் கையாளும் தன்மையும், மணிவாசகர் பெருமான் முன்னிலைப்படுத்திக் கையாளும் தன்மையும் கண்டோம். இனி, எடுத்துக்கொண்ட கட்டுரையின் தலைப்பான நெஞ்சத்தை முன்னிலைப் படுத்தி உபதேசம் செய்யும் பெரியார்கள் வாய் மொழிகளை ஆராய்வாம்.

நெஞ்சத்தை முன்னிலைப்படுத்திச் சைவப் பெரியார்கள் சிறப்பித்து உண்மைகளை உணர்த்துவர். நெஞ்சத்தின் உயர்வை உன்னி உணர்ந்த அன்னோர் அதனைப் பெரிதும் மதித்துத், தாங்கள் மக்களுக்கு அறிவுறுத்த வந்தக்கால் நெஞ்சத்தை முன்னிலைப்படுத்தினர். நெஞ்சத்தின் பெருமை எத்துணை உயர்வுடைய தென்பதை வள்ளுவர் வாய் மொழியால் அன்றோ கண்டு இன்புறல்வேண்டும்.

நெஞ்சே! நடுவுநிலையாகிய தருமத்தைவிட்டுத் தீய வழியாகப் பாவத்தைச் செய்ய நினைப்பாயாகில் இந்நினைவு நான் கெட்டுப்போவேன் என்பதற்கு அறிகுறியென் றறிந்து கொள்ளவேண்டும். நினைத்ததனால் என்னகுற்றமென்றால், நினைத்தலும் செய்தலோடொக்கும் எனப்பெரியோர்கூறுவர்.

*கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்*
*நடுவொரீஇ அல்ல செயின்.*

தமிழ் மறை அளித்த அன்புடை வள்ளலே, மற்றோர் இடத்தில், நெஞ்சே! இது தப்பு என்றுணர்ந்தும் பொய் சொல்லத் துணியாதே! அங்ஙனம் செய்யின் நீ துன்பத்தை அடைவாய் என்பதை வலியுறுத்திக் காட்டுகிறார்.

*தன்னெஞ் சறிவது பொய்யற்கப் பொய்த்தபின்*
*தன்னெஞ்சே தன்னைச் சுடும்.*

மணிவாசகர் "திருச்சதகம் – ஆத்மசுத்தி" என்ற பகுதியில் நெஞ்சை விளித்து, எவ்வளவு கடுமையாக உபதேசம் செய்கிறார் என்பதை உற்று நோக்குமின்!

ஏ பிணநெஞ்சே! நீ இறைவன் தன்மையை உணர்ந்து ஓடுகின்றாய் இல்லை. பெருமானைப் பணிகிறாய் இல்லை. அன்னார் திருப்பாதங்களைச் சூடுகிறாய் இல்லை. அன்னார் இருக்கும் இடம் தேடி அலைகின்றாய் இல்லை, என்று அலறி உபதேசம் செய்கிறார். இதைவிடக் கடுமையாக நெஞ்சத்திற்கு உபதேசம் அளிக்கவும் இயலுமோ? எவ்வளவில் நெஞ்சத்தை இழித்து, உண்மை புகட்டுகின்றார் என்பதைக் காண்மின். இங்ஙனம் பெருமானார் பல இடங்களில் நெஞ்சத்திற்கு உபதேசம் அளிக்கிறார்.

ஓடுகின்றிலை கூத்துடையான் கழற் கன்பிலை யென்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலைதுணையிலி பிணநெஞ்சே!
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே

உழவாரத்தின் படையுறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், நடையுறாப் பெருந்துறவும் பூண்ட வாகீசப் பெருந்தகையார் நெஞ்சத்திற்கு அளிக்கும் உபதேசங்கள் சிலவற்றை ஈண்டுக் காண்பாம்.

நெஞ்சே! மண்ணுலகம் முற்றிலும் கடற்கோளால் கொள்ளப்பட்டாலும், விண்ணின்பால் உள்ள பரிதியும் திங்களும் திசைகெட்டு வீழினும் அஞ்சாதே! என்கிறார் நாவரசர். இங்ஙனம் கூறக் காரணம் என்னை? நீ புகலிடம் ஒன்றுதான் கண்டு கொண்டாயே! அது யாது? அது தான் "கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே" என்பதாம். எத்தகைய வீரப் பொலிவு தோன்றித் திகழ்கிறது என்பதைக் காண்க. நெஞ்சு உரம் பெறின் வீரம் அன்றோ பிறக்கும்? அங்ஙனம் உரம் பெறின், ஊழி பெயரினும், தான் பெயரா நிலை அன்றோ உள்ளத்தில் யாண்டும் நிலவும். இதில் தடையும் உண்டாமோ?

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே!
திண்பால் நமக்கொன் றுகண்டோம் திருப்பா திரிப்புலியூர்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.

நெஞ்சே! இடைவிடாது எண்ணி, தியானித்துக் கொண்டிருப்பவர் இடத்தில் அன்றோ பொன்னார் சடைப்



புண்ணியன் இருப்பன். அங்ஙனமின்றி அன்னாரை நினையாது ஆடம்பரமாகப் பூவும், நீரும் கொண்டு காண எண்ணுவோர்க்கு மறைந்தன்றோ அவன் நிற்பன் என்பது காண்க.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங்கொண்டு
நக்கு நிற்பவர் அவர்தமை நாணியே.

அப்பர் சுவாமிகள் மீண்டுமோர் இடத்தில் (திருவாரூர் திருத்தாண்டகம் 3-ல்) நெஞ்சே! இவ்வுலகில் யாண்டுங் காணப்படும் பொருள்கள் சதமானவை என்று எண்ணாதே! எம்பெருமான் திருக்கோயிலுக்குள் நாடோறும் செல்வாயாக. பொழுது புலர்வதற்கு முன் அலகிட்டு, மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்துப் பாமாலையைச் சாற்றுவாயாக. சென்னி தரையில் படக் கும்பிட்டுச் சங்கரனை நோக்கிக் கூத்தாடுவாயாக என்று உபதேசம் செய்கிறார். இங்ஙனம் உலகிடைவாழ் மக்கள் உய்வான்வேண்டிப் பல இடங்களில் நெஞ்சை முன்னிலைப்படுத்தி உண்மையை விளக்குகிறார் அப்பர் அடிகள்.

முடிவாக இளமையில் துறவு பூண்ட, வெண்காடரென்னும் பட்டினத்தடிகள் நெஞ்சத்தை முன்னிலைப் படுத்தி அறிவிக்கும் உபதேசத்தைக் காண்பாம்.

மனமே! உன்றனுக்கு நான் அளிக்கும் உபதேசம் ஒப்பற்றதென உணர்ந்திருப்பாயாக! கடவுள் இருக்கிறார் என்பதைத் துணிந்திருப்பாயாக! உயர்ந்த செல்வ மனைத்தும் நிலையற்றவை எனக் கருதி யிருப்பாயாக! புண்ணியமே நல்லதென் றிருப்பாயாக! பொது நிலையினின்றும் மாறாமல் நமக்கு விதித்தபடியே யாகுமென் றிருப்பாயாக!

ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு! உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு! பசித்தோர் முகம்பார்! நல்லறமு நட்பு
நன்றென்றிரு! நடுநீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென்றிரு! மனமே யுனக்கே யுபதேசமிதே!

நெஞ்சே! நான் கூறுவதை யுனக்கு உறுதியானதென நம்புவாயா? உன்றனுக்கு இது உபதேசமென்றறி. அஃ

தாவது ஞானாசிரியனது திருவடிகளை நாடும் பொருளான பரம் பொருள் தியானம் எனவே கருதியிருப்பாயாக! அடாத செயற்குரிய இவ்வுடலத்தைத் தோற்பாவைக் கூத்து எனவே கருதியிருப்பாயாக! மக்கள் மனைவி முதலிய சுற்றங்களைச் சந்தையிற் கூடுஞ் சனத்திரள் எனவே கருதியிருப்பாயாக! இவ்வுலக வாழ்வினை மட்குடத்தினின்றும் சாய்த்த வெள்ளத்தின் ஓட்டமெனவே இருப்பாயாக!

நாட்டமென்றேயிரு ! சற்குரு பாதத்தை ; நம்பு ! பொம்ம
லாட்டமென்றேயிரு ! பொல்லாவுடலை ; அடர்ந்த சந்தைக்
கூட்டமென்றேயிரு ! சுற்றத்தை ; வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு ! நெஞ்சே ! உனக்குபதேசமிதே

நெஞ்சத்திற்கு இதைவிட வேறு உபதேசம் அளிக்க இயலுங்கொல்? சமயச் சார்பு வழி நின்ற ஒவ்வொருவர் உபதேசமும், ஒரே வழி நின்று உண்மையைப் புலப்படுத்துவது காண்மின்! ஒப்பிட்டுக் கருத்துக்களை ஒற்றுமை கண்டால், மனம் இன்பத்தில் திளைக்கும் என்பது உண்மை, பெரியார்கள் உபதேச வழியைப் பற்றிச் செல்லின் நாம் உய்வோம் அல்லவா ?

---

# வேந்தும் வேடும்

(ஆரணி. புலவர். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

எல்லா மொழியுள்ளும் ஒரு சொல்லுக்கு ஒத்த சொல்லும் ஒவ்வாச் சொல்லும் உள. அவ்வுண்மைக்குக் காரணம் கருத்தில் அவ்வாறு அமைதலும் உலகிற் பொருள்கள் ஒத்தும் ஒவ்வாதும் இருத்தலும் ஆம். நம் தமிழ் மொழியிலும், 'அறம் பொருளின்பம் வீடு' என்னும் நான்கனுள் ஒவ்வாச் சொல்லில்லை. 'இன்பத் துன்பம்,' 'இரவு பகல்,' 'தலைகால்' என்னும் இணைப்புக்களுள் ஒத்த சொல்லில்லை. 'சோழ சேர பாண்டியர்,' 'புலிவிற் கெண்டை' என்பன போல வொத்தும், 'வேண்டுதல் வேண்டாமை' 'விருப்பு வெறுப்பு' 'பகை நட்பு' 'நாகு விண்' 'கட்டு வீடு' என்பனபோல வொவ்வாதும் வருதல் மரபு. அம்மரபுள், ஒவ்



வாறு வருதலை இருவகையாக் கருதுதல் பெரியோர்க்கியல்பு. வந்தான் என்பதற்கு வாரான் என்பதும் ஒவ்வாததே. போனான் என்பதும் ஒவ்வாததே. வந்தானல்லன் என்பதும் ஒவ்வாததே. இம்முத்திறமும் வினைச் சொல்லில் அமைவன. வரவு என்பதற்குச் செலவு என்பதும், செலவு என்பதற்கு வரவு என்பதும் ஒவ்வாமை காண்க. இது பெயர்ச்சொல்லிலமைவது. இவ்விரு வேறு வகையும் ஒரு பெயரால் உணர்த்துதல் தடுமாற்றத்தைக் கொடுக்கும். அதனால், அறிஞர் வினையொவ்வாமையை 'எதிர்மறை' என்றும் பெயரொவ்வாமையை 'மறுதலை' என்றும் தடுமாற்றம் நேராதவாறு குறித்து வந்தனர். இந்நாளிற் பலர் அவ்வகையறியா தெழுதுகின்றனர். (இலக்கணக் கொத்து. சூ. எசு—என பார்க்க.) வேந்தும் வேடும் என்னும் இவ்விரண்டும் மறுதலைப் பொருளவாய் வேண்டுழி, முன்னோரால் ஒருங்கு குறிக்கப்பட்டு வரும் பெயர்களாகும். ஆகவே, அவற்றை ஆண்டுள்ள இடங்களை நோக்கி யின்புறுதல் புலவர் தொழில்களுளொன்றே.

"திருக்காளத்திமலையெழு கொழுந்தாயுள்ள ஏகநாயகர்" (வேந்தர்)க்கும் "திருக்காளத்திக் கண்ணப்பர்" (வேடர்)க்கும் உள்ள மறுதலை யொழிந்து ஒருதலை யடைந்த நிலையை யுணர்த்தும் அப்புராணத்தை ஈண்டு நினைத்தல் வேண்டும். "உலகில் வேடர் குலப் பெருந்தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலார்" என்றருளிய சேக்கிழார் பெருமான் றிருவாக்கை உணர்தல் நன்று.

இராமனாகிய வேந்தன் குகனாகிய வேடனை நோக்கி, "நீ என் உயிரனையாய், இளவல் உன் இளையான், இந்நன்னுதலவள் நின் கேள், நளிர்கடல் நிலமெல்லாம் உன்னுடையது, நான் உன் தொழிலுரிமையி னுள்ளேன்" என்றது மறுதலைப் பண்பினர் இருவர்க்குண்டாகிய ஒருதலைப் பண்பை உணர்த்துகின்றது. அவ்வேடன் காலில் பாதனாகிய வேந்தன் வீழ்ந்து வணங்கிய ஒற்றுமையை "மலரிருந்த அந்தணனுந்தனை வணங்கு மவனும் அவனடி வீழ்ந்தான்" என்றார் கம்பர். சிபிவேந்தன் வரலாற்றிலும் இவ்வொற்றுமை காணலாம்.

சிவனும் முருகனும் சருவலோக சக்கிரவர்த்தியாயிருந்தும் வேடர் தொடர்புற்ற வரலாறு உலகப் பிரசித்தம்.

"இழிகுல மாகிய எயினர் பாவை நான்
முழுதுல கருள்புரி முதல்வர் நீர்எனைத்
தழுவுத லுன்னியே தாழ்ச்சி செப்புதல்
பழியது வேயலாற் பான்மைத் தாகுமோ?"
(கந்த. வள்ளியம்மை: 90)

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் சங்ககாலப் புலவர் போலச் செந்தமிழ்ச் செய்யு ளருளவல்லா ராயினும், அவர்க்கில்லாத திருவருட் பெருமையுடையராதலின், அவர் செய்யுள் மேற்கோளுட் சிறந்தது. அவர், வேந்தும் வேடும் மறுதலைப் பொருளவாதலை யுணர்த்துமிடம் மிக்க மகிழ்ச்சியூட்டும்.

"இன்று கொளற்பால நாளை கொளப்பொறான்
நின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவன்
ஆவன கூறி னெயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்து மலன்" (நீதிநெறி விளக்கம். ௩௦)

இதில் குடிமக்கள் பாணித்துக் கொடுக்குந் திறையை கொள்ளாக் கொடுமையும், குறையிரந்து கொள்ள நேர்படாத காட்சிக் கருமையும், தனக்கு ஆக்கத்தைச் சொல்லுவான் பல்லுதிர்க்கும் அறியாமையும் ஆகிய மூன்றுமுடையவன் (அரசாளினும்) வேந்தனுமாகான்; அவனுக்கு மறுதலையான வேடனுமாகான் என்றருளிய திறம் போற்றற்பாலது.

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோற்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே"

என்னும் (௧௮௯) புறப்பாட்டில், வேந்தும் வேடும் பெறும் ஒற்றுமை வேற்றுமைகளை யுணர்த்துமாற்றால் அம்மறுதலைப் பொருளுண்மை விளக்கப்பட்டதறிக.



வேந்தனும் வேடனும் ஓரிடத்தை யாளுகையினும், வேட்டையாடுதலினும், வீரம் வென்றி முதலியவற்றினும், மானம் வன்கண்மை முதலியவற்றினும் ஒன்றுபட்ட நிலையராயினும், வேந்தன் நிலமுழுதும் தன்னடிப்படுத்தி, எத்திசையையும் செங்கோலாலளந்து, வெண்கொற்றக் குடை நிழலிலிருந்த பகைவரும் வணங்க ஆழியாணையை யுருட்டி அரசு வீற்றிருக்கும் பெருமையன்.

வேடன், அவ்வேந்தன் எதிரிலும் அணுக அஞ்சுவான். அவன் ஏவலை எதிர்நோக்கி நிற்பான். கடைக்கண்ணோக்கமும் கைவிரலசைவும் உற்றுப்பார்த்திருப்பான். சிறு குற்றேவல் பெரிதும் புரிவான். சிவிகையுந் தாங்குவான். காற்செருப்பும் எடுப்பான். பல்லாக்குந் தூக்குவான். பாதமும் வருடுவான். எச்சிலுமுண்பான். வேந்தன் இச்சையை இயற்றுவான். பிணமெடுப்பான், சுடுவான். மயிர் களைவான். துணி தோய்ப்பான். தாய் தங்கை மகள் முதலிய முறைகெடத் துறையறத் தீவினை செய்வான். யார்க்கும் எப்பொழுதும் மறந்தும் இறந்தும் துன்பஞ் செய்தறியாத குறுமுயலையும் நெடுமானையும் வனக்குயிலையும் இனமயிலையும் தினைக்கிளியையும் பிறவுயிர்களையும் தம் அன்பிற்குரிய இனம் பிரிந்து இரங்கி இருகண்ணீரொழுகவும் அம்மவோ என்றலறவும் நாயும், வாளும், வலிமையும், வன்படையும், வலையும், கொலையும் உடன் வரச்சென்று உறுதுயர்ப்படுத்துவான். பிறன் சோர்வு அறிந்து, பின் விளைவதை நினைக்காமல், அறங்கெடுத்து, வேற்றூர் வீட்டுப் பொருள்களைத் திருடி, வழி போவாரை மடக்கி யலைத்தும் பறித்தும் இவ்வாறு இடைவிடாது செய்தும் தூரா வயிற்றைத் தூர்த்துவருஞ் சிறுமையன்.

இவ்வாற்றால் வேந்தர்க்கு ஆக்கமும் வேடர்க்கு அழிவும் பெரிதும் உரியவாதலறிக.

செல்வரும், வறியரும், அறிவரும், மடவரும் போல வேந்தரும் வேடரும் "மாறுமாறாகிய வேறு வேறியல்பின் ஒருவரையொருவர் ஒவ்வாராகி, உயர்ந்தும் தாழ்ந்தும் உற்றோர்" ஆவர். இம்மறுதலைக் கேது சிவபெருமான் திருவடி மலரை வழிபடலும் வழிபடாமையும் அன்றி

வேறில்லை என்று நுணங்கிய கேள்வியும் வணங்கிய வாயு முடைய மேலவர் முடிவு செய்துளர்.

இம்மறுதலை குறித்தே அநாதிகாலமாக உலக வழக்கி னுள்ளதொரு வரலாற்றைச் சிவஞான போதமும் சிவஞான சித்தியாரும் வேறு நூல்களும் எடுத்துரைக்கின்றன. அவ் வரலாறு பின்வரும். இது :—

“ ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே ”

என்பதில் வேடு வேந்தான வரலாறுணர்த்தப் படுதலறிக.

இதனை ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்,

“ மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் எனமகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமா போற்
றுன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னும்அருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலம்அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன் ”

என்று தெளிவுறுத்தி யருளினர்.

1. “ வெண்கொற்றக் குடையும், 2. நவமணி முடியும், 3. சிங்காதனமும் மன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம். அது போலப் 1. பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒரு பெரு வெண்கொற்றக் குடையும், 2. எவற்றையும் ஒருங்கே ஓரியல் பான அறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ் சுடர் முடியும், 3. எவற் றினையும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்துமியல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும் பிறர்க்கின்றித் தனக்கே உரிமை யாகச் சிறந்தமை பற்றிப், பசுக்களுக்குப் பாசங்களை அரித்தலான் அரன் என்னுந் திருப்பெயருடைய முதல்வனை மன்னவனாகவும் அம்முதல்வனது பேராநந்தப் பெருஞ்செல்வமுழுதும் தனதேயா கக்கொண்டு அனுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ் சித்தெனப்படுஞ் சாதியொப்புவமையும் பற்றி ஆன்மாவை மன்னவ குமாரனாகவும், அவ்வான்மாவை அறிவுப் பெருஞ்செல்வமுழுவதும் ஆறலைத்துக் கொண்டு சிறுமை யுறுத்துதலும் விதிவிலக்கை யிழப்பித்து இழி



தொழிலில் நிற்பித்தலுமாகிய இயல்புபற்றி ஐம்பொறிகளை வேட ராகவும், உருவகஞ் செய்தார். ”

இது மாதவச் சிவஞான முனிவருரை.

இக்கட்டுரையால் வேந்தும் வேடும் மறுதலைப் பொருள் என்பதும், வேந்தரியல்பு உயர்ந்தது வேடரியல்பு இழிந்தது என்பதும், நூலோர் வேந்தர்க்கு வேடரையே மறுதலை யாகக் கொண்டனர் என்பதும் வெளிப்படையாயும், வேட ரியல்பு மிக்குப் பரவும் இந்நாளில் வேந்தரியல்பு மிக்கத் திகழ்ந்து, மழை முதலிய நலங்கள் வாய்த்து நாடு நன்கு செழித்தல் வேண்டும் என்பது குறிப்பாயும் விளங்கும்.

---

# “ பொல்லாதவன் - நெறி நில்லாதவன் ”

(அ. தா. ப. திருஞானசம்பந்தம், அருணை)

உலகில் வினையின் காரணமாக ஜன்மமுற்ற அனை வருமே, பொல்லாதவர்களாயும்—நெறி நில்லாதவர்களாயுமே நின்று காட்சியளிப்பர். இங்ஙனம் இருக்கும் தன்மை யைத் தங்களுக்குள் சிந்தனை செய்யவோ-அன்றித் திருந் திய வழியில் நடக்கவோ எவரும் எண்ணுவதில்லை. நல் லொழுக்க நெறியில் நிற்கும் அறிஞர் ஒருவர் ஏனை யோர் செய்யும் இழிதொழில்களையும், குற்றங்களையும் எடுத் துக்காட்டித் திருந்திய வழியில் நடக்க முயலுங்கள் என்று அறிவுரை கூறினால், அன்னார்மேல் காழ்ப்புக் கொள்வதையே பெரிதும் சிறந்ததென நெறி நில்லா மக்கள் எண்ணுவர். ஆகவே மக்கள் தங்கள்பால் உள்ள குறைகளைத் தெரிந்து கொண்டு, திருத்தி வாழ என்றுமே வாழ்வ தில்லை. மண்ணுலகத்திலே தோன்றிய ஒரு சிலர் தங்கள் குறைகளை எண்ணி, நைந்து, நைந்து உருகினர். அதன் பயனாக அன்னோர் என்றும் அழியாப் பேற்றைப் பெற்ற னர். அப்பேற்றைப் பெற முடியுமா ? அப்படியானால் அது என்ன ? என்ற கேள்விகள் மட்டும் உடனே மனத் தில் தோன்றும். தோன்றினும், மின்னொளிபோல் தோன்றி

186873

மறைவதே இயற்கையாய் இருந்து வருகிறது. எனினும் பேற்றைப் பெற சிறிது இவண் முயல்வோம்.

“ யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு,
உயர்ந்த உலகம் புகும்”

என்பது வள்ளுவர் திருவாக்கு. யான், எனது என்ற எண்ணங்களை விட்டு, பரந்த மனப்பான்மையும், விரிந்த எண்ணங்களும் தெளிந்தக் கல்வியும், பெற்று வாழ்வோர் வானோர்க்கு என ஒதுக்கப்பட்டுள்ள சிறந்த இடத்தில் இடம் பெறுவர் என்பதே இக்குறளால் நாம் அறியும் குறிப்புப் பொருள். மேற்கண்ட நிலையில் வாழாது, மக்கள் எந் நிலையில் வாழ்கிறார்கள். இரங்கத்தக்க நிலையில் அன்றோ! அந்நிலை யாது? ஒரு புலால் உண்பவர் இருக்கிறார். அடுப்பில் உலைக்கு நீர் வைக்கிறார். உலை நீர்ப் பாத்திரத்தில், ஒரு ஆமையை விடுகிறார். தீயெரிக்கிறார். தண்ணீர் இலேசாகச் சுட ஆரம்பிக்கிறது. சாதாரண வெம்மையைக் கண்ட ஆமையோ, இன்பத்தில் மூழ்குகிறது: மூழ்கி விளையாடுகிறது. அத்தண்ணீரே, தனக்கு இறுதி நிலை பயக்கப் போகிறது என்பதை அது அறிந்துகொள்ள இயலவில்லை. தண்ணீர் நன்றாகக் கொதிக்கும்பொழுது ஆமையின் ஆட்டமும் - மகிழ்ச்சியும் என்னவாகும் என்று கூறவும் வேண்டுமோ? அஃதேபோல், உயிர் என்றும் நிலைத்து நிற்கும் என்ற எண்ணத்தைத் திண்ணமாகக் கொண்ட உலக மக்கள் வாழ்வை நடத்தி வருகின்றனர். நம் உயிரையும் கவரக் கொடுங்காலன் ஒருவன் வருவான் என்ற எண்ணம் எழுகிறதில்லை. பொய், வாது, சூது, வஞ்சகம் அனைத்துங் கொண்டு அவா என்ற இன்பக்கடலில் திளைத்து இனிதே வாழ்வர். இங்ஙனம் வாழ்பவர்கள் வாழ்வே தூய்மைப் படுவதில்லை. இதைத்தான் நாலடியாரில் :—

கொலைஞ ருலைபெற்றித் தீமடுப்ப வாமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே,
கொலைவல் பெருங்கூற்றங் கொப்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மைப்பார் மாண்பு



என்ற பாவால் உணரலாம். மேற்கண்ட மக்களே தாங்கள் செய்கின்ற அனைத்தும் சிறந்தன என எண்ணுவர். இவர்களிடத்தில் பண்பு காண இயலுமோ? என்றால் ஒரு சிறிதும் காண முடியாது என்று கூறலாம். இத்தகைய மக்கள், பண்பில்லாமலே சிறந்தவர்கள் என்று தங்களுக்குள்ளே எண்ணி மன ஆறுதல் பெற்றாலும், இம்மக்களை வள்ளுவர் கூறும் வகையில் வைத்து ஒப்பிட்டு ஒருமை கண்டால், எள்ளளவும் பொருத்தம் காண இயலாது. அரம் போல ஒருவர் கூர்த்தமதி படைத்து வாழலாம்! அப்படியிருந்தால் அவர்களிடம் பண்பு இருந்தேத் தீருமோ? இருக்கும் என்று முடிவு கட்டிவிட முடியாது. பண்பும் இருந்து, அறிவும் அரம்போல் கூர்மையாய் இருப்பின், அன்னாரெல்லாம் சிறந்தவர்களே! உயர்ந்தவர்களே! இதுதானே தெய்வப்புலவர் வகுத்துக்காட்டும் செந்நெறி.

“ அரம்போலுங் கூர்மையரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் ”

கூர்மையான அறிவும், பயன்தரத் தகுந்த பண்புகளும் இவைகளின் உதவியால் அவர்வென்ற-நீந்த இயலா ஆழியைக் கடந்தோர் தங்களை எப்பொழுதும், பெரிதாக எண்ணி, உயர்த்திப் பேசிக்கொள்வதில்லை. இங்ஙனம் உயர்த்திப் பேசிக்கொள்ளாதவர் பற்பலர். அவருள்ளும், சிவஞானங் கைவரப்பெற்ற ஆன்றோர் பலர்; ஞானவாரமுயருந்திய ஞானிகள் பலர்; அறிவுக்கடலை நீந்திய அறிஞர் பெருமக்கள் பலர்; உலக வாழ்வின் வெளி மயக்குகள் கண்டுத் திரியாது, இம்மைக்கே வேண்டிய நோன்புகளை நோற்றவர்கள் பலர்.

அத்தகைய வாழ்வு வாழ்ந்த பெருமக்களுள் “ யான் பொல்லாதவன்—நெறி நில்லாதவன் ” என்று கூறுவது யார்? அவர்தான் பட்டினத்தடிகள் ஆவர். மாயா உலகை மதியாது, மாண்புமிக்க இறைவன் தன் மாணடியைச் சிந்தித்துச் சிவஞானம் பெற்றுய்ந்த ஞானியே பட்டினத்தடிகள் ஆவர். இத்தகைய சிறந்த பண்பாளர் தான், தன்னுடைய குணங்களை, அங்கையுற்ற நெல்லிக்

கனியென்ன விளக்கிக் காட்டுகிறார். இவர் இரண்டு பழிகளை அஃதாவது "பொல்லாதவன்-நெறிநில்லாதவன்" என்பதை மட்டும் ஏற்றுக்கொள்ள எண்ணவில்லை; விழைய வில்லை; தன்னிடத்தில் இன்னும் புகல முடியாத-அகற்ற முடியாத-ஆணிவேரென ஆழ்ந்துப் பாந்த குற்றங்கள் இருக் கின்றன என்றுக் கூறுகிறார். அவைகள் யாவை? ஐம்புலன் கடமை வெல்லாதவன் யான்; என்கிறார். இத்துணைக் குணங்களும் தன்னிடம் நல்ல முறையில் அமையாது இருப் பதை எண்ணிய அடிகள், பெருமானே! "மண்ணில் ஏன், பிறந்தேன், இறைவா கச்சியே கம்பனே" என்று நைந் துருகிப் பாட்டிசைத்துள்ளார்.

> பொல்லாதவன் நெறி நில்லாதவன், ஐம்புலன்கடமை
> வெல்லாதவன், கல்வி கல்லாதவன், மெய்யடி யவர்பாற்
> செல்லாதவன், உண்மை சொல்லாதவன் நின்திரு வடிக்கன்
> பில்லாதவன், மண்ணிலேன் பிறந்தேன் கச்சியே கம்பனே!

அடிகள் தம்மை எவ்வளவு இழிவு படுத்திக் கொள்கிறார் என்பதை உற்று நோக்குமின்! உண்மையில் இத்துணைக் குணங்களும் இல்லாதவரா அடிகள்? அற்றன்று. பின் என்ன? நம்மை ஒரு பொருட்டாக-உலக அறிஞர்களை-வைத்து ஒப்பிட்டு நோக்குங்கால் சிறந்தவரே-உயர்ந்தவரே அடிகள்; ஆனால் இன்னருள் பாலிக்கும் இறைவனின் திருக்கலியாண குணங்களுக்கு அடிகள் பொருந்துவரோ எனின், பொருந்தார் என்றே கோடல் சாலும். இங்ஙனே பல பெரியார்கள் தங்களை இழிவு செய்தும் "பொய் யன்" என்றும், கூறிக்கொள்வதை ஈண்டுச் சில உதாரணங்க ளால் கண்டு பட்டினத்தடிகள் நிலைக்கு, எந்த அளவில் அக் கருத்துக்கள் அறன் செய்கின்றன என்பதைக் காண்போம்.

சைவத்தின் வாழ்வே, தன் வாழ்வென எண்ணி வாழ்ந்த, சொல்லின் வல்ல நாவரசர் பெருமானும், தன்னைப் பற்பல இடங்களிலே இகழ்ந்துரைத்துச் செல்வதைக் காண லாம். "நான் கள்ள உள்ளத்தோடு இருந்தேன்; அவ் உள்ளத்தோடு தொண்டு செய்து, காலத்தைக் கழித்தேன்; ஏமாற்றி நின் பாதம் அடைய எண்ணினேன்; வழியைக் காண இயலவில்லை; பின்னர் தெளிந்த அறிவுடையவனானேன்; அந்நிலையில் உன்னைத்தேடினேன்; பின்னர் நான் உன்னை நாடினேன்; கண்டு கொண்டேன் உன்னை" எனப் பின்வரும் செய்யுளால் தான் இருந்ததாக அவர் எண்ணும் இழி நிலையை விளக்கிக் காட்டுகிறார்.



> கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
> தெள்ளியேனாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்,
> உள்கு வாருள்கிற் றெல்லாம் உடனிருந் தறுதி என்று
> வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே

இன்னுமோர் இடத்தில் பெருமானே தன்னை "நாய்" என்று இழிவுபடுத்திக் கொள்கிறார். வெண் சங்கொத்த மேனிச் செல்வா! நாயேன், அங்கத்தை மண்ணுக்காக்கி னேன்; ஆர்வத்தை உனக்கேதந்தேன்; பின் பங்கத்தை போக மாற்றிப் பாவித்தேன்; அதன்பின் நீ! எங்குற்றாய் என்று வினவின பொழுது, நீ இங்குற்றதை, யான் கண் டேன்" என்று பாட்டிசைக்க வருங்கால் எல்லாக் கலை ஞானங்களும், கைவரப் பெற்ற அப்பர் பெருமான் தன்னை இழிவு படுத்திக் கொள்கிறார்.

[தொடரும்]

---

## மதிப்புரை

திருவாசகம் - நீத்தார் விண்ணப்பம் - கதிர்மணிவிளக் கம்: உரையாசிரியர் - முதுபெரும் புலவர் பண்டிதமணி - மு. கதிரேசன்செட்டியார். விலை 2-12-0.—இது திருச்சதக உரைக்குப்பின் இரண்டாம் பகுதியாக வெளிவந்த ஒரு சிறந்த நூல். இனி விரைவில் மற்றப்பகுதிகளும் வெளி வரும் என்று எதிர்பார்க்கிறோம். இப்படிப்பட்ட விளக்க உரை ஒன்று, தமிழையும் சைவத்தையும் அறிவதற்கு இன்றியமையாத ஒரு வெளியீடு என்று சொல்வதில் மிகை இல்லை. இறைவனே ஆசிரியனாய்வந்து உபதேசம் செய்ததின் பயனாக வாதவூரடிகள் திருச்சதகத்தை அருளிச் செய்தார். பின்னர் வீடுபெறுதற்கு உடனே அழைத்துக் கொள்ளாமல் இன்னும் உலகிலே சிறிதுகாலம் இருக்கச் சொல்லிவிட்டு இறைவன் மறைந்தருள அதனைப்

15-ம் நாளன்று விடியற்காலை சமாதியானார்கள். 27-12-'50 புதனன்று மாலை தென்னார்க்காடு மாவட்ட மாஜிஸ்டிரேட் - உயர்திரு. எஸ். நடராஜ நாடார் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பல புலவர்களும் மடத்து அன்பர்களும் கலந்துகொண்டனர். ஏழாவது பட்டமாக வந்துள்ள ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான ஆறுமுக சிவாச்சாரிய சுவாமிகள் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

---

திருப்பாதிரிப்புலியூர்

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் குருபூசை

(சு. இராஜேஸ்வரி, அண்ணாமலைநகர்)

சென்ற தைப்பூச நன்னாளிலே புலிசை ஞானியார் மடாலயத்தின் ஐந்தாம் முறைத் தலைவராய ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளின் குருபூசை வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை ௯ மணி அளவில் சமாதி தோட்டத்தில் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. குறிப்பாக இவ்வாண்டு விழாவில் மடாலயத்துப் பழைய அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணிக்கு சைவத்திருவாளர் ராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியாரவர்கள் - சமாஜக் காரியதரிசியார் தலைமையில் சைவ சித்தாந்த மகா சமாஜத் தலைவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக ரிஜிஸ்டிரார் - உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. கிருஷ்ணசாமி ஐயர், B.A., சித்தாந்தக்கலாநிதி - திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திரு. வெள்ளைவாரணர், திருமதி புஷ்பம் நடராஜ நாடார் அவர்கள் சுவாமிகளது பல திறப்பட்ட பண்புகளை எடுத்துரைத்தனர். திரு. அம்மையார், சுவாமிகள் நினைவு நிதியை நல்ல முறையில் திரட்டி ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது இத் தலைமுறையினர் அவசியம் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்தினர். சுவாமிகளது சொற்பொழிவுக் குறிப்புக்களையும் அன்பர்கட் கெழுதிய கடிதங்களையும் வெளியிட வேண்டுவது பற்றிப் பேசப்பட்டது. இறுதியாக அவர்கள் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்தை நல்ல முறையில் நடத்தவேண்டு மென்பதையும் கூறினர். அண்மையில் ஏழாம் பட்டமாக அமர்ந்துள்ள சுவாமிகள் வந்தனத்துடன் இரவு 10 மணி அளவில் கூட்டம் முடிவுற்றது.

பொறுக்கமுடியாத நிலையில் அடிகள் உத்திரகோசமங்கைக்குச் சென்று இறைவனை விளித்து நெஞ்சு உருகப் பாடிய பாடல்கள் நீத்தல் விண்ணப்பம் ஆகும். இப் பாடல்களைப் படிக்கையில், ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாதவை என்று தோன்றும். ஆனால் தொடர்பு உண்டு என்று இந்த விளக்க உரை காட்டுகிறது. அங்கங்கே அரிய சொற்களுக்கு எடுத்துக்காட்டி யிருக்கும் பொருள் நயம் பாராட்டத்தக்கது. சாதாரண மக்களுக்கே யன்றிப் படித்த மக்களுக்கும் இந்த உரை நுட்பக்கருத்துக்களை எடுத்து விளக்கி மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. தமிழ் மக்கள் இதனைப் பெரிதும் போற்றுவார்களாக. அப்படிச் செய்யின் அது பிற வெளியீடுகளுக்கு ஊக்கம் தருவதாகும்.

---

## சைவமாநாடு ஆசி உரைகள்

இராமநாதபுரம் சைவ மா நாட்டிற்கு அடியிற்கண்ட அன்பர்கள் ஆசி உரைகளை அனுப்பி யுள்ளார்கள். அவைகள் மா நாட்டில் படிக்கப் பெற்றன.

1. இராமநாதபுரம் மன்னர்—காளிகட்டத்திலிருந்து ஆசி உரையைத் தந்தி மூலம் அனுப்பினார்.

2. மதுரைச் செல்வர் கருமுத்து தியாகராச செட்டியார்—ஆசி தந்தி மூலம்.

3. கீழ்க்கரை—எஸ்.வி.எம். ஜமாலுத்தீன் அவர்கள் ஆசி தந்தி மூலம்.

4. இராசபாளையம் இராமசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆசி தந்தி மூலம்.

5. திவான்பகதூர் வி. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் முந்திய அமைச்சர்—ஆசி கடித மூலம்.

6. சமத்தூர் சு. சுந்தரசாமி அவர்கள்—கடித மூலம்.

7. தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர்—ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் சைவ சமாஜம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தம் அரிய கருத்துக்களைத் தெளிவாக எழுதி இரண்டு கடிதங்களை அனுப்பினார்கள்.

---

186873

## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 | 0 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் ... | 0 | 4 |
| திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை | 0 | 1 |
| குகார்ச்சனை திருமந்திரம் ... | 0 | 1 |
| திருவாசகத் திரட்டு 6 பை , சீவக சிந்தாமணி .... | 1 | 12 |
| கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல்.... | 0 | 3 |
| அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு .... | 0 | 1 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8: அங்கத்தினருக்கு | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... | 0 | 2 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street. Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Vaiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Sellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.